டிசம்பர் 2014 December | இதழ் 287 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION






நவம்பர் 27 – தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்

24th Year வது ஆண்டில்

Growing with the Community ESTD 1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
ரஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

# பொறுப்பை நிறைவேற்றுங்கள்!

இலங்கையில் இன்னலுக்கு உள்ளாகும் தமிழர்களின் நிலை இதுதான் என்ற உண்மையை வலியுடன் பதிவுசெய்துவிட்டுச் சென்றிருக்கிறார், இலங்கை வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன். சென்னையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் அவர் பேசிய பேச்சு, மர்மத் திரைகள் பலவற்றை அகற்றியிருக்கிறது.

தெற்கில் இருந்து சிங்களர்களை அழைத்துவந்து வடக்கில் குடியேற்றும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது. ராணுவத்தினருக்கு வீடுகள் கட்டித் தருவது முதல், தமிழர் பகுதிகளில் சிங்களர்களை அதிகாரிகளாக நியமிப்பது வரை சிங்களமயமாக்கம் பல வழிகளிலும் நடந்துவருகிறது என்கிறார்.

போரின் விளைவாக, ஒரு லட்சம் தமிழ் விதவைகள் உருவாகியுள்ளனர் என நிஜ நிலைமையை வேதனையுடன் விவரிப்பவர், இந்தியா சார்பாக இலங்கைத் தமிழர்களுக்காக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தில் ஊழல்கள் மலிந்திருக்கின்றன. அரசியல் சகாயம் பெற்றவர்களுக்கே அந்த வீடுகள் கிடைக்கின்றன என்கிறார். உதவியிலும் ஊழல் நடக்கிறது என்பது பெரும் தலைக்குனிவு. ஈழத் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படுவது குறித்து தமிழ்நாட்டில் இருந்து எந்தக் குரல் எழுந்தாலும், இந்தியா சார்பாக இலங்கையில் செய்யப்பட்டுவரும் மறுவாழ்வுப் பணி-களைத்தான் பதிலாக இந்திய அரசு முன்னிறுத்தும். அந்த மறுவாழ்வின் உண்மை நிலவரம் இதுதான் எனும்போது, அதை உடனே சரிசெய்யவேண்டியது இந்தியாவின் பொறுப்பு.

விக்னேஸ்வரனின் மற்றொரு செய்தி தமிழ்நாட்டுக்கு... எங்களுக்கு இப்போது தேவை உணர்ச்சிகள் அல்ல் சட்டபூர்வமான தீர்வு என்கிறார். இந்தக் கருத்தை, தமிழக அரசியல்வாதிகள் கவனத்துடன் பரிசீலிக்க வேண்டும். ஈழத் தமிழர்கள் நமது தொப்புள்கொடி உறவுகள் என்ற உணர்ச்சிபூர்வ மனநிலைக்கு அப்பால் இருந்து இதைச் சிந்திக்க வேண்டும். நமது உணர்ச்சிவசப்பட்ட போராட்டங்கள் அங்கு புதிய துன்பம் ஒன்றைத் தோற்றுவித்துவிடக் கூடாது. எனில், நடைமுறையில் எது ஈழத் தமிழர்களுக்கு நன்மை தரும் என்பதைச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

முக்கியமாக, இந்திய அரசு தனது வரலாற்றை தானே ஒருமுறை நினைவூட்டிக்கொள்ள வேண்டும். ஈழத் தமிழர் சிக்கலைத் தீர்க்க 1987-ல் மேற்கொள்ளப்பட்ட ராஜீவ் காந்தி-ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தில் தமிழர் தரப்பின் சார்பாகக் கையெழுத்திட்டது இந்திய அரசாங்கம்தான். ஓர் இனப் போராட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தில், அந்த இனத்தின் பிரதிநிதியாக தானே முடிவெடுத்துச் செயல்பட்ட இந்திய அரசு, அந்தப் பொறுப்பை இப்போதாவது உணர்ந்து செயல்பட வேண்டும்.

ஈழத் தமிழர்களின் வலி தீர்க்க வினையாற்ற வேண்டும்.

***ஆனந்த விகடன் சஞ்சிகையின் 2014 நவம்பர் 13ம் திகதிய இதழின் தலையங்கம் அதன் நிகழ்கால முக்கியத்துவம் கருதி இங்கு நன்றியுடன் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.***

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

# 24வது ஆண்டு பூர்த்தி மலர் வெளியீடும் வருடாந்த விருது விழாவும்

கடந்த 286 மாதங்களாகக் கனடாவில் மாதந்தவறாது வெளிவருகின்ற 'தமிழர் தகவல்', அடுத்த மாதம் (2015 ஜனவரி) தனது 24வது ஆண்டினைப் பூர்த்தி செய்யவுள்ளது என்பதை எமது அபிமான வாசகர்களுக்கும் வணிகத்துறை ஆதரவாளர்களுக்கும் எழுத்தாள அன்பர்களுக்கும் மகிழ்ச்சி கலந்த பெருமையுடன் அறியத் தருகின்றோம்.

கனடியத் தமிழரின் அடையாளமாக மிளிர்கின்ற 'தமிழர் தகவல்', இந்த மண்ணின் மூத்த இதழியலாகவும், சர்வதேச ரீதியாக வசிப்பவர்களின் எழுத்துகளையும் நிகழ்வுகளையும் பதிவு செய்து வரும் தனித்துவ இதழாகவும் துறைசார் வல்லுனரால் மதிக்கப்படுகிறது.

புலம்பெயர் மண்ணில் 'அறிஞர்களையும் கலைஞர்களையும் வாழும்போதே சிறப்பித்து மதிப்பளிப்போம்' என்பதை ஒரு முன்னுதாரணமாக ஆரம்பித்து வைத்த பெருமையும் தமிழர் தகவலுக்கே உரியது.

ஒவ்வொரு ஆண்டின் பூர்த்தியையும் முன்னிட்டு நடைபெறும் விழாவில் பல்துறைசார் பிரமுகர்களுக்கு விருது வழங்கி, தங்கப் பதக்கம் சூட்டுவதோடு ஒட்டியதாக தமிழர் தகவல் ஆண்டு மலரும் வெளியிடப்படுவது வழக்கம்.

இந்த வரிசையில், 24வது ஆண்டு பூர்த்தி மலர் எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் முன்னைய ஆண்டுகளைப்போல சுமார் 160 பக்கங்களில் வெளிவரவுள்ளது.

வழமை போல பல்துறைப் பிரமுகர்களும், கலைஞர்கள் அறிஞர்களும் மாணவ மணிகளும் இவ்விழாவில் விருது வழங்கி தங்கப் பதக்கம் சூட்டி சிறப்புச் செய்து மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

விழா தொடர்பான மேலதிக விபரங்கள் அடுத்த இதழில் வெளிவரும். எம்முடன் தொடர்பு கொள்வதற்கான வழிகள் கீழே:

**மின்னஞ்சல்:** tamilsinfo@sympatico.ca

**தபால்:** P.O.Box - 3, Station - F
Toronto, ON.
M4Y 2L4

# வருமான வரி செலுத்தாதவர்களுக்கு கனடிய பிரஜாவுரிமை மறுக்கப்படும் புதிய சட்டம் ஆறு மாதத்துள் நடைமுறைக்கு வரவுள்ளது

## Canada's New Citizenship Rules

இந்த வருடம் ஜுன் மாதம் கனடிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, அங்கீகாரம் பெற்ற புதிய பிரஜாவுரிமைச் சட்டம் (சி-24) இன்னமும் ஆறு மாதங்களில் - அனேகமாக அடுத்த வருட கோடை விடுமுறைக்குள் நடைமுறைக்கு வருமென்பது ஊர்ஜிதமாகியுள்ளது.

இச்சட்டம் அமுலுக்கு வந்த பின்னர், புதிதாக பிரஜாவுரிமைக்கு விண்ணப்பம் செய்பவர்கள் பல கெடுபிடிகளைச் சந்திக்க நேரிடும். கனடாவில் வாழ்ந்திருக்க வேண்டிய கால அளவு, ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியிலான புலமை, பரீட்சை எடுக்க வேண்டிய கட்டாய வயதெல்லை, குற்றச் செயல்கள் புரிந்திருக்காமையை நிரூபித்தல், மோசடிகளில் ஈடுபட்டிருந்தமையை மறைப்பதால் ஏற்படும் பாதிப்பு, கட்டாயமாக வருமான வரி செலுத்தியிருக்க வேண்டுமென்று பல விடயங்கள புதிய சட்டத்தில் அடங்கியுள்ளன.

புதிய சட்டத்தின் கீழான கட்டண அரிகரிப்பு இந்த வருட நடுப்பகுதியில் நடைமுறைக்கு வந்துவிட்டது. இதன்படி, 200 டாலர்களாகவிருந்த கட்டணம் நானூறு டாலர்களாக அதிகரித்துள்ளது தெரிந்ததே. தற்போது பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்கும் ஒருவர், விண்ணப்பிக்கும் காலத்துக்கு நேரடி முன்னதான நான்கு வருடங்களில் கட்டாயமாக மொத்தம் 1095 நாட்கள் கனடாவுக்குள் வசித்திருக்க வேண்டும். இதற்கு ஒரு நாள் குறைவாகவிருந்தாலும் விண்ணப்பிக்க முடியாது.

புதிய சட்டம் அமுலுக்கு வந்த பின்னர் விண்ணப்பிப்பதாயின் அந்த நாளுக்கு நேரடியாக முன்னரான ஆறு வருடங்களில் 1460 நாட்கள் கட்டாயமாகக் கனடாவுக்குள் வசித்திருக்க வேண்டும். நாட்களின் எண்ணிக்கையில் சொல்வதானால், 2190 நாட்களில் 1460 நாட்கள் கனடாவுக்குள் வசித்திருக்க வேண்டியது கட்டாயம். அது மட்டுமன்றி, குறிப்பிட்ட ஆறு ஆண்டுகளுக்குள் வரும் நான்கு ஆண்டுகளுக்கு, வருடமொன்றுக்கு ஆகக்குறைந்தது 183 நாட்கள் (ஆறு மாதங்கள் என்ற கணக்கில்) இங்கு வசித்திருக்க வேண்டும்.

தற்போதைய விதிகளின் பிரகாரம் 18 வயதுக்கும் 54 வயதுக்குமிடைப்பட்ட ஒவ்வொரு-வரும் பிரஜாவுரிமைப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைய வேண்டும். 54 வயதுக்கு மேற்பட்டவர்கள் முதியவர்களாகக் கணிக்கப்பட்டு இதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றது.

ஆனால் புதிய சட்டம் அமுலுக்கு வந்த பின்னர் பரீட்சைக்குத் தோற்றும் வயதெல்லை 14 முதல் 64 வயதாகின்றது. இதன்படி, 14 வயதுக்கு மேற்பட்டவர்கள் கட்டாயம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். 64 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே பரீட்சை விதிவிலக்கு அளிக்கப்படும்.

புதிய சட்டத்தின் கீழ் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பம் செய்யும் வளர்ந்தவர்கள் (adults) வருமானவரிப் படிவம் வருடாவருடம் சமர்ப்பித்திருக்க வேண்டியது கட்டாயம். தவறின் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். புதிய சட்டத்தின் கீழான சில விடயங்களை மேலோட்டமாக ஆங்கிலத்தில் பார்க்கலாம்:

* New residency requirements of 4 years (1,460 days) out of 6 years for cirizenship eligiblity.
* Permanent Residents must be physically present in Canada for 183 days (minimum) per year in 4 years out of 6 years.
* Time spent in Canada as a non-permanent resident (non PR) does not count towards the 6 years.
* A new 'intent to reside' provision.
* Citizenship applicants who are aged 14-64 must meet laanguage requirements, and pass the citizenship test.
* Applicabts must meet knowledge requirements in English or French.
* Strengthen restrictions on citizenship for people with foreign criminal charges and convictions.
* Applicants may be refused because of fraud.
* Shortening of the citizenship granting process from 3-steps to 1-step.
* Adult applicants must file Canadian income taxes to be eligible for citizenship.●

எஸ்.தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

ஸ்காபரோ றுஜ்வலி வைத்தியசாலையில் கடமையாற்றிய ஊழியர் ஒருவர், 2009 க்கும் 2013மிடையிலான காலப்பகுதியில் அங்கு சிகிச்சைபெற்ற சுமார் 8,300 கர்ப்பிணித் தாய்மார் தொடர்பான தகவல்களை, உரிய அனுமதியின்றி காப்புறுதி நிறுவனமொன்றுக்கு ரகசியமாக வழங்கியது தெரியவந்துள்ளது. குழந்தைகள் கல்விக் காப்புறுதி நிறுவன முகவர்கள் சில தாய்மார்களைத் தொடர்பு கொண்டதையடுத்து, இந்த ரகசிய தகவல் பரிமாற்றம் பற்றி பொலிசார் நடவடிக்கை எடுக்க நேர்ந்தது.

கனடிய அரசியலில் லஞ்சமும் ஊழலும் இருப்பதாகக் கனடியர்களில் மூன்றிலொரு பங்கினர் கருதுகின்றனர். இது தொடர்பாக றையசன் பல்கலைக் கழக முகாமைத்துவப் பிரிவு நடத்திய கருத்துக் கணிப்பொன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது. அரசியல்வாதிகள் லஞ்சம் பெறுவதாக மக்கள் கருதுகின்றனர். இவர்களின் ஊழல்கள் காரணமாக ஐந்திலொரு கனடிய வாக்காளர்கள் தேர்தல்களில் வாக்களிப்பதைத் தவிர்த்துள்ளனர் என்றும் இந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

வணிக நிலையங்களில் பொருட்களுக்குப் பணம் செலுத்துவதை மணிக்கட்டில் கட்டும் பட்டியொன்றின் மூலம் செலுத்தும் புதிய வழிமுறையொன்றை றோயல் வங்கி அறிமுகம் செய்யவுள்ளது. கிறெடிற் கார்ட் அல்லது டெபிற் கார்ட் மூலம் பணம் செலுத்துவதற்கு ஒப்பானது இந்தப் புதிய நடைமுறை. முதலில் ரொறன்ரோவிலுள்ள 250 வாடிக்கையாளர்கள் மற்றும் 45 வணிகளைத் தெரிந்தெடுத்து அவர்கள் ஊடாக பரீட்சார்த்தமாக இதனை செயற்படுத்திப் பார்க்க றோயல் வங்கி தீர்மானித்துள்ளது.

குடும்ப வரிவிலக்கு என அழைக்கப்படும் புதிய திட்டமொன்றை அமுலுக்குக் கொண்டுவரப் போவதாகக் கனடியப் பிரதமர் அறிவித்துள்ளார். இதன்படி,அதிக வருவாய்க்காக வரி செலுத்தும் ஒருவர், தமது வருவாயில் 50,000 டாலர்கள் தொகையான பணத்தைக் குறைந்த வருமானமுள்ள தமது வாழ்க்கைத் துணைவருக்கு மாற்ற முடியும். இதன் மூலம் மீளத்தரப்படாத வரி - வருமானமாக வருடமொன்றுக்கு சுமார் இரண்டாயிரம் டாலர்கள் வரை பெற்றுக் கொடுக்கும்.

வேலை புரியுமிடங்களில் இடம்பெறும் பாலியல் தொடர்பாக நடவடிக்கைகளை அதற்கான சட்டங்கள் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படுமென ஒன்ராறியோ மாகாண முதலமைச்சர் கத்லின் வின் உறுதியளித்துள்ளார். கனடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சி நடத்துனராகவிருந்த ஜியான் கொமேஷி மீதான பாலியல் புகார், முன்னாள் கனடிய உதவிப் பிரதமர் ஷிலா கொப்ஸ் ஒன்ராறியோ சட்டசபை உறுப்பினராகவிருந்தபோது பாலியல் தொல்லைக்குள்ளானதாகத் தெரிவித்த புகார் ஆகியவைகளையடுத்து கத்லீன் வின் இந்த உறுதிமொழியை அளித்தார்.

சர்வதேச ரீதியில் ஒன்ராறியோ மாகாண மாணவர்கள் கணினி அறிவில் முன்னணியில் திகழ்வதாக ஓர் ஆய்வு தெரியத்தந்துள்ளது. இத்துறைசார் இருபது நாடுகளிலுள்ள எட்டாம் வகுப்பில் கல்வி கற்கும் சுமார் அறுபதாயிரம் மாணவர்களை மையப்படுத்தி இத்தெரிவு நடத்தப்பட்டது. கணினியின் ஊடாக தகவல்களைச் சேகரித்தல், மேலாண்மைத் திறன், தகவல் பரிமாற்றம் போன்றவற்றில் மாணவர்களுக்குள்ள அறிவு மற்றும் ஆற்றல்களை அடிப்படையாக வைத்து இவ்வாய்வு நடத்தப்பட்டது.

குழந்தைகளையும் சிறுவர்களையும் கொண்ட குடும்பங்களுக்கு அதிகூடிய வரி நிவாரணத்தை வழங்கும் திட்டத்தைக் கனடிய அரசு அறிவித்துள்ளது. இதன்படி, 6 முதல் 17 வயது வரையிலான சிறுவர்களைக் கொண்ட குடும்பங்கள் அறுபது டாலர் வரி ஆதாயத்தைப் பெறவுள்ளன. அடுத்தாண்டு நடைபெறவுள்ள தேர்தல் வெற்றியை இலக்கு வைத்து கனடிய கன்சர்வேடிவ் கட்சி இந்த வரி நிவாரணத் திட்டத்தை அறிமுகம் செய்யவிருப்பதாக எதிர்க்கட்சிகள் பலமாகச் சாடியுள்ளன.

# மூத்த முன்னணி எழுத்தாளர் எஸ். பொ காலமானார்



சர்வதேச ரீதியில் புகழ்பெற்றுத் திகழ்ந்த ஈழத்தின் மூத்த முன்னணி எழுத்தாளரும், நற்போக்குச் சிந்தனையாளருமான 'எஸ்.பொ' (எஸ். பொன்னுத்துரை) ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் தமது 82வது வயதில் கடந்த மாதம் 26ம் திகதி காலமானார். நல்லூரில் பிறந்து, திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் ஆரம்பத்தில் கல்வி கற்ற இவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலும் உயர் கல்வி கற்றுப் பட்டதாரியானவர்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து அந்தக் கொள்கை வழியில் உருவான முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் சேர்ந்திருந்த எஸ்பொ, பின்னர் அவர்களின் பாதையில் முரண்பட்டுச் சென்று நற்போக்கு என்பதை அறிமுகம் செய்து தனித்துவமாகச் செயற்பட்டார். கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஆசிரியராகக் கடமையாற்றிய பின்னர் நைஜீரியா சென்று அங்கு ஆங்கில விரிவுரையாளராகப் பணியாற்றிய பின்னர் ஆஸ்திரேலியாவில் குடும்பத்தினருடன் குடியேறினார்.

சிறுகதை, கவிதை, நாவல், நாடகம் ஆகிய எழுத்துப் பரப்புள் பல புதுமைகளையும் புதுப்போக்குளையும் கையாண்டு புகழ்பெற்ற எஸ். பொவின் தீ, சடங்கு ஆகிய நாவல்கள் சர்ச்சைகள் ஊடாகப் பிரபல்யமானவை. வீ, அவா, ஆண்மை ஆகியவை இவரின் புகழ்பெற்ற சிறுகதைத் தொகுதிகள்.

விடுதலைப் போராட்டத்தில் ஆகுதியான தமது மகன் மித்ரவின் நினைவாக சென்னையில் 'மித்ர' மதிப்பகத்தை ஆரம்பித்து, தமது படைப்புகளை மட்டுமன்றி புலம்பெயர்ந்த பலரது நூல்களையும் வெளிக்கொணர்ந்த பெருமைக்குரிய இவர், தமிழிலக்கிய உலகில் ஓர் அசுர சாதனையாளராக மதிக்கப்பட்டு வந்த நட்சத்திரப் படைப்பாளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடியத் தமிழர் சமூகத்தின் ஈடற்ற இழப்புகள்

## மனநல வைத்திய நிபுணர் துரைச்சாமி சூரியபாலன்



கனடாவின் பிரபல்யமான மனநல வைத்திய நிபுணர்களில் ஒருவரான துரைச்சாமி சூரியபாலன் அவர்கள் கடந்த மாதம் 8ம் திகதி சனிக்கிழமை மார்க்கத்திலுள்ள தமது இல்லத்தில் குடும்ப உறவினர்கள் சூழ்ந்திருக்கக் காலமானார். தமிழீழத்தில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், 1990 மே மாதம் ஸ்காபரோ வைத்தியசாலையில் இணைந்து நீண்ட காலம் கடமையாற்றிய பின்னர், இறுதியாக ஸ்காபரோ றுஜ்றிவர் வைத்தியசாலையில் பணியாற்றி வந்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் புகழ்பெற்ற மாணவர்களில் ஒருவரான இவர், கல்வியில் மட்டுமன்றி விளையாட்டு மற்றும் வாத்திய இசை போன்ற இன்னோரன்ன துறைகளிலும் அக்காலத்திலேயே முன்னணியில் திகழ்ந்தவர். இலங்கையில் சிறிது காலம் மட்டுமே பணியாற்றிய பின்னர் வெளிநாடு புறப்பட்டு இங்கிலாந்தில் சிறப்புப் பட்டம் பெற்ற பின்னர், தமது மனைவியுடனும் இரு புதல்வர்களுடனும் கனடாவில் குடியேறினார்.

சிறந்த சாயி பக்தரும் ஆன்மீகவாதியுமான டாக்டர் சூரியபாலன், சமூகத்தால் மதிக்கப்பட்ட சேவையாளராக விளங்கியவர். இவருடைய மென்மையான உரையாடலும், அமைதியான ஆலோசனைகளும் நோயாளர்களுக்கு மன ஆறுதலை அள்ளி வழங்கி, வாழ்வின் நம்பிக்கையை ஏற்படுத்திக் கொடுத்தன. மனநலம், குடும்பநலம், சமூக-சமய நலம் தொடர்பாக சுமார் நூறு வரையான ஆலோசனைக் கட்டுரைகளை இலகுவான தமிழிலும் விளங்க வைக்கும் நடையிலும் 'தமிழர் தகவல்' சஞ்சிகையில் இவர் எழுதியுள்ளார். தமது அப்பழுக்கற்ற சேவைகளுக்காக 2001ம் ஆண்டு டாக்டர் சூரியபாலன் 'தமிழர் தகவல்' சிறப்பு விருதுடன் தங்கப் பதக்கமும் சூட்டி மதிப்பளிக்கப்பட்டவர் - **திரு**

## பல்கலைக்கழக பேராசிரியர் செல்வா கனகநாயகம்




ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் ஆங்கிலத்துறைப் பேராசிரியரும், ஆரோக்கியமான எழுத்தாளரும், சிறந்த கலை-இலக்கிய விமர்சகருமான செல்வா கனகநாயகம் (62) அவர்கள் கடந்த மாதம் 22ம் திகதி காலமானார். ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் வருடாந்தம் நடைபெறும் தமிழியல் மாநாடு, மற்றும் தமிழ் இலக்கியத் தோட்டம் ஆகியவற்றின் நிறுவனர்களில் முக்கியமான ஒருவரான பேராசிரியர் செல்வா கனகநாயகம், பெருமளவிலான ஆய்வு மற்றும் விமர்சனக் கட்டுரைகளைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார்

முக்கியமான இவரது எழுத்துகள் ஆங்கிலத்தில் எட்டு நூல்களாக வெளிவந்து பலரது பாராட்டையும் பெற்றுள்ளன. கடந்தாண்டு தமிழ் இலக்கியத் தோட்ட வெளியீடாக வந்த "In Our Translated World: Contemporary Global Tamil Poetry' என்னும் நூல் குறிப்பிடத்தக்க படைப்பு. Royal Society of Canada அதன் அங்கத்துவமான Fellowship வழங்கி இவரைக் கௌரவித்த வைபவத்தில் கலந்துவிட்டு, இரவு உணவை எடுப்பதற்கு சென்றுகொண்டிருந்த சமயம் திடீர் மாரடைப்பு ஏற்பட்டு மொன்றியலில் இவர் காலமானார். மேற்படி கௌரவம் பெற்ற முதலாவது கனடியத் தமிழர் பேராசிரியர் செல்வா கனகநாயகம் என்பது சிறப்பானது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றபின், பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டப் பெற்ற இவர் காலஞ்சென்ற தமிழ்த்துறைப் பேராசிரியர் செல்வநாயகம் அவர்களின் புதல்வர். கனடா வருவதற்கு முன்னர் சில வருடங்கள் யாழ். பல்கலைக் கழகத்தில் ஆங்கில விரிவுரையாளராகப் பணியாற்றியவர். இவரது மனைவியும் இரு பிள்ளைகளும் மிசிசாகாவில் வசிக்கின்றனர். - **எஸ்தி**

## 'கீதவாணி' நடா ராஜ்குமாருக்கு புதிய பண்பலை (FM) ஒலிபரப்பு அனுமதி



கனடாவின் தமிழ் ஒலிபரப்புத்துறை முன்னோடிகளில் முக்கியமானவரான 'கீதவாணி' வானொலி நிலைய அதிபர் நடா ராஜ்குமாருக்கு, புதிய பண்பலை (FM) ஒலிபரப்புச் சேவையை ஆரம்பிப்பதற்கான அனுமதியை கனடிய அரசின் சி.ஆர்.ரி.சி ஆணையம் வழங்கியுள்ளது. நடா ராஜ்குமாரின் கட்டுப்பாட்டின் கீழ் 8041393 Canada Inc என்ற கூட்டுத்தாபனம் இப்புதிய சேவையை ஆரம்பிக்கும். தெற்கு-கிழக்கு-மேற்காசிய சமூகத்து இளைஞர்களை இலக்கு வைத்து பதினெட்டு இனக்குழுமங்களைச் சார்ந்த ஒன்பது மொழிகளில் இந்தப் புதிய பண்பலை ஒலிபரப்புச் சேவையை நடத்த உரிமம் வழங்கப்பட்டுள்ளது. ரொறன்ரோ, ஸ்காபரோ மற்றும் வைற்சேச்-ஸ்டோவில் பகுதிகளில் துல்லியமாகக் கேட்கக்கூடியதாக இச்சேவை நடத்தப்படும்.

சிறு வயதிலிருந்தே கலைத்துறையில் நிரம்பிய ஈடுபாடு கொண்டு வந்த ராஜ்குமார், 1985ல் கனடா வந்ததைத் தொடர்ந்து 1986ல் மொன்றியலில் தமிழர் ஒளியால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் வானொலிச் சேவையின் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் அதன் பொறுப்பாளராகவும் பணியாற்றியவர். 1992ல் ரொறன்ரோவில் வாரத்துக்கு சில மணி நேரச் சேவையாக 'கீதவாணி'யை ஆரம்பித்து, 1999ல் அதனை 24 மணிநேரச் சேவையாக்கி பல்துறை நிகழ்ச்சிகளைப் புகுத்தி தொடர்ந்து நடத்தி வருபவர்.

ராஜ்குமாரின் ஒலிபரப்புச் சேவையின் அங்கீகாரமாக 'தமிழர் தகவல்' விருதும் தங்கப்பதக்கமும் 2001ம் ஆண்டில் வழங்கப்பட்டது. நல்லதொரு ஒலிபரப்பாளராகவும் நிர்வாகியாகவும் சமூகத் தொண்டராகவும் இவர் ஒலிபரப்புத் துறையில் முப்பதாண்டுகளை தொடர்ச்சியாக எட்டிப்பிடிக்கவுள்ள வேளையில், பண்பலைச் சேவைக்கான அனுமதியைப் பெற்றிருப்பது சிறப்பானது.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# சமையலறையில் வெட்டும் பலகை

"நாங்கள் கடைச் சாப்பாடே சாப்பிடுறதில்லை. வீட்டுச் சாப்பாடுதான். எப்படி இது வந்தது என்று தெரியவில்லை" என்றார் ஐயா. அம்மாவும் ஒத்துப் பாடினா. அவர்கள் வீட்டிலிருந்து மூன்று பேருக்கு ஒரே நாளில் வயிற்றோட்டமும் வாந்தியும் வந்திருந்தது.

"உணவில் கிருமி தொற்றியதால்தான் வந்திருக்கு. கடையில் வாங்கிச் சாப்பிட்டீர்களா" என்று கேள்வி கேட்டதற்குத்தான் அந்த மறுமொழி வந்தது.

பொதுவாக வீட்டில் தயாரிக்கும்போது உணவில் கிருமி தொற்றுவதற்கான சாத்தியம் குறைவு. காரணம் என்ன?

அம்மா, அக்கா சில தருணங்களில் அப்பா உணவு தயாரித்திருப்பார். தங்கள் வீட்டு விடயம் என்பதால் அக்கறையோடு மிகவும் சுத்தமாகத் தயாரித்திருப்பார்கள். ஆனால் கடைச் சாப்பாடு அப்படியல்ல. தயாரிப்பதே பலராக இருந்திருக்கும். அது சாப்பாட்டு மேசைக்கு வருவதற்கிடையில் பல கைகள் மாறியிருக்கும். பல கரண்டிகள் உணவினுள் தவண்டிருக்கும்.

அதே நேரம் வீட்டில் சமைத்தால் கிருமி தொற்றாது என்றும் சொல்ல முடியாது. வீட்டிலும் பல வழிகளில் கிருமிகள் உணவில் தொற்றலாம். சமைக்கும்போது, சமைத்ததைப் பாத்திரத்தில் எடுத்து வைத்திருக்கும்போது, கரண்டியிலிருந்து, குளிர்சாதனப் பெட்டிக்குள் வைப்பதற்கு முன்பு எனப் பல வழிகளில் கிருமிகள் பரவ வாய்ப்புகள் உண்டு.

நீண்ட நேரம் பேசியும் இவர்களது உணவில் கிருமி தொற்றியத்தற்கான காரணம் பிடிபடவில்லை. கடைசியில்தான் ஒரு பலகைதான் காரணம் என்பது புரிந்தது. அதுவும் ஒரே ஒரு பலகையாக இருந்ததுதான் காரணமாகும். இரண்டாக இருந்திருந்தால் சிலவேளை தப்பியிருக்க வாய்ப்புண்டு.

**சமையலறையில் சுத்தம்**

சமையலறையும் பாத்திரங்களும் சுத்தமாக இருந்தால்தான் உணவு மாசடையாது இருக்கும். சமைப்பவர், பரிமாறுபவர்களும் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

சமையலறைத் தூய்மையில் வெட்டும் பலகையின் (Cutting board) சுத்தத்திற்கு முக்கிய இடம் உண்டு. அவற்றை உரிய முறையில் கழுவி கிருமி நீக்கம் செய்து உபயோகிப்பதை வழமையாகச் செய்ய வேண்டும்.

இல்லையேல் நோய்களை உண்டாக்கக் கூடிய E. Coli and Salmonella போன்ற கிருமிகள் அதில் தங்கியிருந்து நோய்களைப் பரப்பக் கூடும்.

**வெட்டும் பலகையைச் சுத்தம் செய்வது**

அவற்றைச் சுத்தம் செய்ய வேண்டிய முறைகள் அவை எவற்றால் ஆனவை என்பதைப் பொறுத்தது.

கிளாஸ் அல்லது பிளாஸ்டிக் ஆகியவற்றாலான வெட்டும் பலகைகளை சுத்தம் செய்வது இலகு. சோப் போட்டுக் கழுவலாம். அல்லது கிருமி நாசினி (detergent) கலந்தவற்றால் சுத்தம் செய்யலாம். வசதி உள்ளவர்கள் பாத்திரங்கழுவி (dishwasher) மெசினில் இட்டுக் கழுவலாம்.

ஆனால் மரப்பலகையினாலான வெட்டும் பலகைகளை பாத்திரங்கழுவி மெசினில் போட்டுக் கழுவுவது நல்லதல்ல. அவ்வாறு செய்தால் பலகையில் வெடிப்புகள் அல்லது பொருக்குகள் ஏற்படலாம். இதனால் வெட்டிய உணவின் துகள்கள் அவற்றினிடையே ஒழிந்து கிடந்து கிருமிகள் பெருகி வளரச் செய்யும். அதேபோல தண்ணீரில் ஊறவிட்டுக் கழுவினாலும் பலகை வீங்கி வெடித்து அதற்குள் கிருமிகள் பெருகி வளர இடம் அளிக்கும்.

குறைந்தது இரண்டு வெட்டும் பலகைகளையாவது சமையலறையில் வைத்திருக்க வேண்டும்.

இறைச்சி மீன் போன்றவற்றை வெட்டுவதற்கு ஒன்று. காய்கறி பழவகைகள் போன்றவற்றை வெட்டுவதற்கு மற்றொன்று. ஒன்றிலுள்ள மாசு மற்றதற்கு பரவாது தடுப்பதை இதனால் தடுக்க முடியும். மாமிச உணவுகளில் கிருமி தொற்றுவதற்கும் பெருகுவதற்குமான சாத்தியம் மிகமிக அதிகம். மாமிச உணவிற்குப் பயன்படுத்திய அதே வெட்டும் பலகையில் காய்கறி பழங்களை வைத்து வெட்டினால் அந்த விசக் கிருமிகள் இவற்றிற்குப் பரவிவிடும்.

பாண், கேக் அல்லது ஏனைய சமைத்த உணவுகளை வைத்து வெட்டுவதற்கு மற்றொரு பலகை வைத்திருப்பது மேலும் உசிதமானது.

எப்படியாயினும் ஒரு வகை உணவை வெட்டுவதற்கு பயன்படுத்தும் வெட்டும் பலகையை மற்ற வகை உணவை வெட்டுவதற்கு பயன்படுத்துவது நல்லதல்ல.

வெட்டும் வேலை முடிந்ததும் பலகையை காலம் தாழ்த்தாது உடனடியாகவே சுத்தம் செய்வது அவசியமாகும். சோப் போட்டுக் கழுவுவது நல்லது. சுடு தண்ணிரால் மீண்டும் கழுவது சிறந்ததாகும்.

கத்தி வெட்டு வடுக்கள், வெடிப்பு சிராய்ப்பு போன்ற காயம்பட்ட பழைய பலகைகளை வைத்திருக்க வேண்டாம். உடனடியாகவே கழித்து அகற்றிவிடுங்கள்.

நீரினால் கழுவுவதால் பலகையிலான வெட்டும் பலகையில் நீர் ஊறிப் பழுதடையச் செய்துவிடும். எனவே நீண்ட நேரம் நீரில் ஊறவிடாது கழுவ வேண்டும்.

நீருக்குப் பதிலாக வினிகர் (vinegar) கொண்டு சுத்தம் செய்யலாம். ஒவ்வொரு முறை பயன்படுத்திய பின்னரும் பலகையை வினிகரால் துடைத்து சுத்தம் செய்ய வேண்டும். பயன்படுத்திய பின்னர் அதிலுள்ள ஈரலிப்புத்தன்மை காய்ந்த பின்னர் வினிகரை மேற்புறத்தில் ஸ்ப்ரே செய்யுங்கள். 10-30 நிமிடங்கள் கழிந்த பின்னர் சுத்தமாகத் துடைத்து எடுங்கள். வினிகரில் உள்ள அசெட்டிக் அமிலமானது E. coli, Salmonella, and Staphylococcus போன்ற கிருமிகளைச் செயலிழக்கச் செய்துவிடும்.

மரத்திலான வெட்டும் பலகையில் துர்மணம் தோன்றாதிருக்க முதலில் சற்று பேக்கிங்

(30ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# விபத்து

பல வருடங்களுக்கு முன்னர் கிரஹாம் கிரீன் என்ற புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் எழுதிய ஒரு சிறுகதையை படித்தேன். மிகச் சிறிய கதை. அது இன்றும் பேசப்படுகிறது. கீழே அதன் சாராம்சத்தை வரிக்கு வரி மொழிபெயர்க்-காமல் பொதுவான என் மொழியில் கொடுத்திருக்கிறேன்.

செவ்வாய் காலை இரண்டாம் பாடம் முடிந்து மூன்றாவது ஆரம்பிப்பதற்கு முன்னர் ஜெரோம் தலைமையாசிரியரால் அழைக்கப்பட்டான். ஏதாவது பிரச்சினை இருக்கும் என்று அவன் பயப்படவில்லை. அவன் மாணவர் தலைவன். மிஸ்டர் வேர்ட்ஸ்வேர்த் அவருடைய மேசைக்கு பின்னால் கலவரமான முகத்துடன் அமர்ந்திருந்தார். அறைக்குள் நுழைந்தபோது அச்சமூட்டுவதுபோன்ற உணர்வை ஜெரோம் அடைந்தான்
"ஜெரோம், உட்கார். பாடங்கள் சரியாகப் போகின்றனவா?" என்று மிஸ்டர் வேர்ட்ஸ்வேர்த் கேட்டார்.
"ஆமாம், சேர்."
"ஒரு தொலைபேசி அழைப்பு உன்னுடைய மாமியாரிடமிருந்து எனக்கு வந்தது. அது நல்ல செய்தி அல்ல.'
"ஆமாம், சேர்"
"உன்னுடைய அப்பாவுக்கு ஒரு விபத்து நேர்ந்திருக்கிறது."
"ஓ"
மிஸ்டர் வேர்ட்ஸ்வேர்த் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தார். "பாரதூரமான விபத்து."
"ஆமாம், சேர்."
ஜெரோம் தன் தகப்பனை ஆராதித்தான். தன் கற்பனையில் அவன் தகப்பனை உயரத்துக்கு வளர்த்தெடுத்திருந்தான். அவர் பெய்ரூட், கனாரிஸ் போன்ற தூர தேசங்களுக்கு பயணம் செய்யும் மர்மமான துணிச்சல்காரர். அவனுடைய 8வது பிறந்த தினம் வந்தபோது அவனுடைய தகப்பன் துப்பாக்கிகள் கடத்துகிறார் அல்லது பிரிட்டிஷ் உளவுத்துறையில் வேலை செய்கிறார் என்று நம்பினான். இப்போது ஜெரோம் நினைத்துப் பார்த்தபோது ஒருவேளை அவர் மெசின் துப்பாக்கி ரவைகளால் சரமாரியாக சுடப்பட்டு இருக்கலாம் எனத் தோன்றியது.

மிஸ்டர் வேர்ட்ஸ்வேர்த் மேசையிலிருந்த ரூலரை உருட்டி விளையாடினார். அவருக்கு தொடர்வது கடினமாயிருந்தது.
"உனக்கு தெரியுமா உன் அப்பா நேப்பிள்ஸ் நகரத்தில் இருந்தார் என்பது."
"அமாம், சேர்."
"உன்னுடைய மாமிக்கு இன்றுதான் மருத்துவ மனையிலிருந்து செய்தி கிடைத்தது."
"ஓ."
மிஸ்டர் வேர்ட்ஸ்வேர்த் ஆற்றாமையுடன் சொன்னார், "அது ஒரு தெரு விபத்து."
"ஆமாம், சேர்." அவர்கள் தெரு விபத்து என்றுதான் கூறுவார்கள் என்பது ஜெரோமுக்கு தெரியும். போலீஸ் முதலில் சுட்டிருக்கவேண்டும். அவனுடைய அப்பா வேறு வழியில்லை என்றால் ஒழிய ஒரு மனித உயிரை எடுக்கமாட்டார்.
"உன்னுடைய அப்பா மிக மோசமாக காயப்பட்டிருக்கிறார் என நான் அஞ்சுகிறேன்."
"ஓ."
"உண்மை என்னவென்றால் ஜெரோம் நேற்று உன் அப்பா இறந்துபோனார். வலியில்லாமல் மிக அமைதியாக இறந்தார்."
"அவர்கள் இருதயத்தை துளைத்து சுட்டார்களா?"
"என்ன? என்ன சொல்கிறாய் ஜெரோம்?"
"அவர்கள் இருதயத்தை துளைத்து சுட்டார்களா?"
"ஒருவரும் சுடவில்லை, ஜெரோம். ஒரு பன்றி அவர் மேல் விழுந்தது."
மிஸ்டர் வேர்ட்ஸ்வேர்த்தின் முகம் வலிப்பு வந்ததுபோல இழுத்துக்கொண்டது. ஒரு கணம் அவர் சிரிக்கப்போவது போல் இருந்தது. அவர் கண்களை மூடினார். இயல்பு நிலைக்கு திரும்பி, வாயை திறந்து ஒருவரும் எதிர்பார்க்காத வேகத்தில் கதையை சொல்லிமுடித்தார்.
"உன்னுடைய அப்பா ஒரு நெருக்கமான வீதியில் நேப்பிள்ஸில் நடந்தபோது அவர் மீது ஒரு பன்றி விழுந்தது. அதிர்ச்சியான விபத்து. நேப்பிள்ஸ் நகரத்தின் வறியவர்கள் வசிக்கும் பகுதியின் மேல்மாடிகளில் பன்றி வளர்ப்பார்கள். ஐந்தாம் மாடியில் இருந்த இந்தப் பன்றி அளவுக்கதிகமாக கொழுத்துவிட்டதால் பாரம் தாங்காமல் மாடி உடைந்தது. பன்றி உன் அப்பாவின் மேல் விழுந்தது.
மிஸ்டர் வேர்ட்ஸ்வேர்த் தன்னுடைய மேசையை விட்டு எழும்பி அவசரமாக யன்னல் பக்கம் போய் ஜெரோமுக்கு முதுகை காட்டி நின்றார். அவர் உணர்ச்சிவசப்பட்டு மெல்ல நடுங்கினார்.
ஜெரோம் கேட்டான், "பன்றிக்கு என்ன நடந்தது?"

புறநானூறு 305 பாடல்
வயலைக் கொடியின் வாடிய மருங்குல்,
உயவல் ஊர்தி, பயலைப் பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே் அதற்கே
ஏணியும் சீப்பும் மாற்றி,
மாண்வினை யானையும் மணி களைந்தனவே.

கொடி போல மெலிந்த இடையும், தளர்ந்த நடையும் கொண்ட பார்ப்பனன் இரவில் அரண்மனைக்குள் புகுந்து சில சொற்கள் சொன்னான். கோட்டை ஏணிகளை அகற்றினார்கள். கதவு குறுக்கு மரங்களை நீக்கினார்கள். போர் யானைகளின் மணிகளை கழற்றினார்கள். போர் நின்றது.

பார்ப்பனன் என்ன சொன்னான்?●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

48

'மனம்' என்பது மூளை நிகழ்த்துகின்ற பல்வேறு ஆற்றல் தொழிற்பாடுகளின் விளைவு என்பது புரிகிறது. இது சாதாரணம் முதல் சிக்கலான நடத்தைகள் வரை செல்கிறது (Mind is a range of functions carried out by the brain; ranging from simple motor behaviour to complex). இதற்குள் உணவு உண்ணுவது, நடப்பது, விழிப்பு நிலை, சிந்தனை, பேசுதல், படைப்பாற்றல், கற்பனை, மூளைக்கலங்களின் இயக்கம் எல்லாம் அடங்கும்.

மனம் என்பது விழிப்புணர்வின் இருக்கை போன்றது மதிநுட்பத்தின் சக்தி போன்றது சிந்திப்பது அல்லது உணர்வு போன்றது. ஞாபகங்களின் தொகுதி போன்றது. அதாவது மனம் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு செயல்பாடாகும். மனத் தெளிவு (Mental clarity) இருந்தால் மட்டுமே எல்லாம் சாதகமாக முடியும். மனத்தெளிவுள்ளவர்கள் மாசற்ற மனத்தினர் ஆவர். எந்தக் கொடுமைகளுக்கு ஆட்பட்டாலும் மனத்தில் தெளிவுள்ள ஒருவருக்கு பாதிப்பு ஏற்படாது. உடல் பாதிப்புற்றாலும் உள்ளம் பாதிப்படையாது.

வாழ்க்கையின் அர்த்தமே மன அமைதிதான். மனதிலே சஞ்சலமில்லாமல், குழப்பமில்லாமல் மிக மிக தெளிவான மனத்துடன் எவர் ஒருவர் தனது பொழுதைக் கழிக்கிறாரோ, அவர் நடத்துவதுதான் வாழ்க்கை. இரட்டை மனதுடன் வாழ்பவர்களே மன உளைச்சலுக்கு உட்படுகின்றனர்.

தமிழக சினிமா நடிகர், சூப்பர் ஸ்டார் ரஜனி காந்த், சிவாஜிராவ் என்ற இயற்பெயர் உள்ளவர். பஸ் கண்டக்டராக ஆரம்பித்து கோடிக்கணக்கான தமிழர்கள் மத்தியில் வெறும் நடிகராக மட்டுமன்றி எல்லோரது பார்வையையும் தன் பக்கம் ஈர்த்தவர். தியானத்தில் மன அமைதி பெற்று இமாலயம் வரை சென்று வந்தவர். தமிழ் நாட்டில் இளைஞர்கள் அவருக்காக எத்தியாகமும் செய்யக் காத்திருக்கின்றனர். விரல் அசைத்தால் தமிழக அரசியலை மாற்றக்கூடிய வல்லமையுள்ளவர். உலக அரங்கில் தன் புகழ் சேர்த்தவர். முகச்சவரம் செய்யாத ஒரு கறுப்பு ஆணழகனல்லாத ஒருவரால் எப்படி இந்த அளவுக்கு உயர முடிந்தது என்பது வியப்புக்குரியது. இதற்குப் பதிலாக அவருக்கிருந்து மனவலிமையும் மனத்தெளிவுமே காரணமாகலாம்.

இரண்டாயிரம் வருட இலக்கிய வரலாற்றில் 'மனம்' என்ற அழகான பெயரை மிகவும் மதிநுட்பமாகப் பாவித்தவர் வள்ளுவர் என்றே கூற முடிகிறது. மனத்திலே மாசு, மனத்தில் வாய்மை, மனத்தில் தூய்மை, மனம் கோணாமை, மன உணர்ச்சி போன்ற பல கருத்துக்களை குறள் மூலம் மிகவும் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இவ்வளவு நீண்டகாலமாக இச்சொல் பாவிக்கப்பட்டமை மிகவும் சிறப்பு வாய்ந்ததொன்று. 'Manas' என்ற சமஸ்கிருதச் சொல்லையே 'மனசு' என்று கூறி வந்துள்ளோம். மனந்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி (The power of knowing is from the mind) என்ற வள்ளுவரின் கருத்தினையே இன்று விஞ்ஞான கருத்துகளும் மறுதலிக்கின்றன.

மனம் ரோசா பூப்போல் மென்மையானது. ஆனால் பாறாங்கல்லைப்போல இறுகியும் விடும்.

மீண்டும் சந்திப்பேன்...●

## இராணுவ வீரர் போன்று ஆள்மாறாட்டம் செய்தவர்



கடந்த மாதம் 11ம் திகதி ஒட்டாவாவில் இடம்பெற்ற தேசிய வீரர் நினைவு வைபவத்தின்போது இராணுவ வீரரைப் போன்று சீருடையணிந்து படைத்துறைச் சின்னங்களுடன் கறுப்புக் கண்ணாடியோடு தோற்றமளித்து ஊடகத்துறையினரை ஏமாற்றிய நபர் பிடிப்பட்டுள்ளார். திருமணமான 31 வயதுடைய பிராங்க் கெர்வைஸ் (Frank Gervais) என்பவர் மீது பல குற்றங்களைக் காவற்றுறை சுமத்தியுள்ளது. இந்த மாதம் 9ம் திகதி இவர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவார்.

## இரு இடைத்தேர்தல்களிலும் கன்சர்வேடிவ் வெற்றி!

ஒன்ராறியோவிலும் அல்பேர்ட்டாவிலுமாக இரண்டு தொகுதிகளில் கடந்த மாதம் 17ம் திகதி நடைபெற்ற இடைத்தேர்தல்களிலும் ஆளும் கன்சர்வேடிவ் கட்சியினர் வெற்றி பெற்றனர். விற்பி-ஒஷாவா தொகுதியில் பற் பேர்கின்சும், யலோஹெட் தொகுதியில் ஜிம் எக்லின்ஸ்கியும் வெற்றி பெற்றனர். இரண்டு தொகுதிகளும் கன்சர்வேடிவ் கட்சியின் வசமே முன்னரும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

## மத்திய லிபரல் கட்சியின் நாடாளுமன்றக் குழுவிலிருந்து இரு உறுப்பினர்கள் நீக்கம்

மத்திய லிபரல் கட்சியின் நாடாளுமன்றக் குழுவிலிருந்து இரண்டு எம். பிக்களை கட்சியின் தலைவர் ஜஸ்ரின் ரூடோ கடந்த மாதம் நீக்கம் செய்தார். என். டி. பி கட்சியின் இரண்டு பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றச் சபாநாயகரிடம் தெரிவித்த தவறான நடத்தை பற்றிய புகாரையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றக் குழுவிலிருந்து நீக்கப்பட்டுள்ள இரண்டு எம். பிக்களும் திருமணமாகி தமது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் வாழ்ந்து வருபவர்களென ஊடகங்கள் அடையாளம் காட்டியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# மகாபாரதம் விஜய் ரி.வி. தொடர்
# Vijay TV serial Mahabarath

கடந்த ஒரு வருட காலத்துக்கு மேலாக (16.09.2013 - 31.10.2014) விஜய் ரி.வி. இருந்த வீடுகளில் வார நாட்களில் ஒலித்த "அகிலம் போற்றும் பாரதம், இணையில்லாத காவியம்" என்ற பாடல்களின் வரிகளின் ரீங்காரம் ஓய்ந்துவிட்டது. விஜய் ரி.வி. - வசதி இல்லாதவர்கள் தமது கணினிகளில் மகாபாரதம் பார்க்கும் படலமும் ஓய்ந்துவிட்டது. வேதகால முனிவர் வியாசர் தந்த சிரஞ்சீவி காவியத்தை அவனியெங்கும் நிலையாக நின்ற ஒளிபரப்பும் சுடராக விஜய் ரி.வி. மாற்றிவிட்டது. மகாபாரதம் சிறு சிறு கதை-களைப் பின்னிப் பிணைத்த ஒரு நீண்ட காவியம். எத்தனை கதாபாத்திரங்கள், எத்தனை அரசுகள், எத்தனை போர்கள், எத்தனை உணர்ச்சிக் குவியல்கள், எத்தனை போதனைகள் - சொல்லிக் கொண்டே போகலாம். எல்லாவற்றையும் ஒரு சிக்கலும் ஏற்படாமல் ஒரு நீண்ட தொடராக மக்கள் முன் வைப்பது ஒரு இமயச் சாதனை. அதனை மிகவும் நேர்த்தியாகவும், கச்சிதமாகவும் விஜய் ரி.வி. நடத்தி முடித்துவிட்டது. முடித்து விட்டார்கள் என்பதல்ல - ஏன் முடித்துவிட்டார்கள் எனப் பலரையும் ஏங்க வைத்துள்ளனர். நடிகர்களின் தெரிவுக்கு ஒரு சலாம் போட வேண்டும். அந்த அந்தக் கதாபாத்திரத்துக்கு ஏற்ற வகையில் நடிகர்களைத் தெரிவு செய்துள்ளனர். இதில் வியப்புக்குரிய விடயம் யாதெனில் ஒரு சில நடிகர்களைத் தவிர எல்லோருமே 30 வயதுக்குட்பட்டவர்கள். அக்கால வழக்கப்படி மேலங்கி இன்றி எல்லா ஆடவர்களும் தோன்ற வேண்டிய நிர்ப்பந்தம். அதனால் அவர்களின் வெற்றுடம்புகளை விதம் விதமான ஆபரணங்களால் அலங்கரித்து, பார்ப்போரின் மனதில் விரசம் ஏற்படாதவாறு மிகவும் கண்ணியமாக காட்சியளிக்கச் செய்துள்ளனர். அது மாத்திரமல்ல எல்லோரையுமே ஆண் அழகர்கள் என கூறுவது முற்றிலும் உண்மை என்பதற்கு முகப்புத்தகத்தில் அவர்களுக்கு வரும் குறிப்புகளே சாட்சியாகும்.

பிதாமகர் பீஷ்மராக நடிக்கும் Arav Chowdaryக்கு வயது 28 என்றால் நம்ப முடிகிறதா? எத்தகைய கிழத்தோற்றத்தை ஒரு 28 வயது இளைஞனில் புகுத்தலாம் என்பதற்கு மேக்கப் கை கொடுக்கும் என்பதற்கு இவரின் உருவம் ஒரு சான்று. மரணப் படுக்கையில் - அம்புகள் மேல் சயனிக்கும் பொழுது ஒரு வயோதிபனின் மிடுக்கும், அதே நேரத்தில் தளர்வும், பாசமும், பாண்டவர் மேல் காட்டும் பச்சாதாபமும் பார்ப்போரை பரிதவிக்க வைக்கின்றன.

அருச்சுனனாக நடிக்கும் Shaheer Sheikh 30 வயது இளைஞர் (March 26th 1984). ஒரு இஸ்லாமிய மதத்தைச் சார்ந்தவர் - நம்ப முடிகிறதா? ஒரு இஸ்மாயில் இந்து சமய காவியத்தின் தலைவனாக நடிப்பது என்பது சாதாரண விடயமல்ல. எத்தனை அர்ப்பணிப்புடன் இவர் நடித்துள்ளார் என்பதை இவருக்கு வந்து குவியும் கணினிக் குறிப்புகளே காட்டுகின்றன. ஒரு சட்ட வல்லுனராக இருப்பதோடு, நடிகராகவும், மொடல் ஆகவும் விளங்கும் இவர் இத் தொடரில் நடிப்பதற்காக மிகவும் கடுமையான வில் வித்தை, வாள் சண்டை, குதிரையோட்டம் முதலியவற்றில் பல மாதக் கணக்காகப் பயிற்சி பெற்றுள்ளார். இத்தகைய கடின உழைப்பை அவர் லாவகமாக குதிரையில் செல்வதைப் பார்க்கும் பொழுதே அறிய முடிகிறது.

திருதராட்டினராக நடிக்கும் Aneep Singh Thakurக்கு வயது 25 தான் ஆகிறது. கண்பார்வை இல்லா கபோதியாகவும், பாசம் கொண்ட தந்தையாகவும், புத்திர சோகத்தால் பேதலிக்கும் கல் நெஞ்சத் தந்தையாகவும், சகோதரனின் பிள்ளைகளை தன் பிள்ளைகளுக்காக வெறுத்து இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்கும் தந்தையாகவும் உணர்ச்சிகளை பிரதிபலிக்க முடியாத கண்களோடு மிகவும் துல்லியமாக நடித்துள்ளார்.

சகுனியாக நடிக்கும் Praneet Bhat க்கு வயது 27 தான் ஆகிறது (Sept 26th 1987). திருகுதாளம் நிரம்பியவர்களைப் பார்த்து சகுனி மாமா என்று சொல்ல வைத்த இந்த கதாபாத்திரத்தை ஒருவிதமான குறையும் இன்றி நிறைவேற்றியுள்ளார். அவர் ஒரு கண்ணை மூடுவதை முதலில் நான் கணினி தந்திரம் (Graphics) என நினைத்தேன். ஆனால் அவரின் இயற்கை தந்திரம் என்பதனை அறிந்தபோது வியக்காமல் இருக்க முடியவில்லை.

கிருஸ்ணராக நடிக்கும் Saurab Raj Jain 29 வயதினர் (Dec 1st 1985). கிருஸ்ணரை நினைத்து வழிபடும்பொழுது கண்களை மூடினால் இவரின் தோற்றம்தான் தமக்கு மனக்கண்களில் வருவதாக பலரும் குறிப்பிட்டுள்ளனர். அவ்வளவு தூரத்துக்கு அவர் கிருஸ்ணராகவே மாறிவிட்டார். அவரின் கீதை உபதேசம் ஒன்றே மகாபாரதம் பார்ப்பதற்கு போதிய காரணமாக அமைகிறது. கம்பீரமான தோற்றத்துடனும், கம்பீரமான நடையுடனும், அதேநேரம் கனிவான உபதேசங்களை அவர் பாஞ்சாலிக்கு வழங்கும் பொழுது அவரின் விஸ்வரூப தரிசனம் முன் தலைவணங்குகிறோம்.

துரியோதனனாக நடித்த Arpit Raskaவுக்கு வயது 26 தான் ஆகிறது. நாடகம் முழுக்க அவனது முரட்டுத்தனத்துக்கு குறைவில்லை. அவர் தான் மிகவும் இயல்பாகவே நடித்துள்ளதாகவும் தனது இயற்கை தன்மையே இதுதான் என்கிறார். கடைசி மூச்சு உள்ளவரை பாண்டவர்களை ஒழித்துக் கட்ட வேண்டும் எனத் துடிக்கும் ஆவேசத்தினைப் பார்க்கும் பொழுது அவர் மேல் துளியும் அனுதாபம் வரவில்லை. சகுனியின் துர்போதனை இல்லாவிட்டால் இவர் வேறு மாதிரி மாறியிருக்கலாம் என நினைக்கவும் வேண்டியுள்ளது. ஏன் எனில் சில சமயங்களில் மனதில் தடுமாற்றம் ஏற்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

கர்ணனாக நடிக்கும் Aham Shamaவுக்கு வயது 24 - பால் முகம் மாறாத இவரின் வதனத்தில் மயங்கிய பல இளம் பெண்கள் தமது கூச்சத்தைவிட்டு மிகவும் பகிரங்கமாக இவருக்கு அனுப்பும் குறிப்புகளை பார்க்கும்பொழுது இக்காலத்துப் பெண்களின் துணிவை மெச்ச வேண்டியுள்ளது - மனதில் நினைத்தாலும் வாயால் சொல்லத் துணிவில்லாத காலத்தில் வாழ்ந்த எம்மால் இப் பெண்களைக் குறை கூற முடியவில்லை. "செஞ்சோற்றுக் கடனுக்காக சேராத இடத்தில் கர்ணன் சேர்ந்து" படும் துன்பம் சாதாரண துன்பமன்று. கூடப் பிறந்த சகோதரர்கள்தான் பாண்டவர்கள் என்று தெரிந்த பின்பும் கூட நட்புக்காக அவர்களை எதிர்த்து மரணத்தறுவாயில் அவன் சிரித்த முகத்துடன் கிடப்பதை பார்க்கும் பொழுது கண்கலங்காதவர் ஒருவரும் இல்லை எனலாம்.

பீமனாக நடிக்கும் Surav Gurjavக்கு வயது 27 ஆகிறது. மல்யுத்தத்தில் சிறந்து விளங்கும் ஒரு குடும்பத்தைச் சார்ந்த இவரும் ஒரு மல்யுத்த வீரர் என்பதனை அவரது தோற்றமே பறை சாற்றுகிறது.

மகாபாரதத் தொடரில் நடித்த அத்தனை பேரும் 30 வயதுக்குக் குறைந்தவர்களே. துரோணபதன் ஒருவனே (Sudesh Beng) 54 வயதுடையவர் (20th July 1959). உடல்வாகுவுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதை ஒவ்வொரு கதாபாத்திரத்தின் தோற்றத்திலும் காணக்கூடியதாக உள்ளது.
பெண் நடிகைகள் துரௌபதையையும் குந்தியையும் அடுத்த இதழில் பார்ப்போம்...●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் பத்தாம் பக்கம்

# இருளின் பிடியில்

இரவின் மடியில் உலகம் உறங்கும்.ஆனால் இருளின் பிடியில்..... ஓசைகள் அடங்கும். ஆசைகள் தொடங்கும்.

இந்த மாதம் 16ம் திகதியிலிருந்து 22ம் திகதி வரை சூரியனைச் சூழ ஏற்படவிருக்கும் பாரிய சூரிய புயலால் உலகெங்கும் இருளில் மூழ்கும் என்றொரு அறிவிப்பை அமெரிக்க விண் ஆய்வு மையம் 'நாசா' வெளியிட்டது. எனினும் இதனை மறுத்து மறு அறிக்கை வெளியாக முன்பாகவே இதயங்களில் ஏனோ குடியேறியது ஒரு 'கும்'!

அந்த ஆறு நாட்களும் பகல் கூட இரவைப் போலவே இருட்டாயிருக்கும் என்ற விபரீத கற்பனையில் பயம் காணப் புறப்பட்ட மனசு, அந்த ஆறு பகல்களும் மப்பும் மந்தாரமாக இருக்கும் என எண்ண மறந்தது ஏன்? சற்று யோசித்துப் பார்த்தால் நமக்கு உள்ளேயும் வெளியேயும் எத்தனை இருள்!

ஏன் இந்த இருள் என்ற கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் உண்டு. நாம் நம் சிந்தனை வெளிச்சத்தை தொலைத்து விட்டோம் என்பதுதான் அது. எந்தச் செய்தியையும் அலசாமல் ஏற்றுக் கொள்ள கற்றுக் கொண்டதில், ஆராயாமல் வேடிக்கை பார்க்க விருப்பம் வளர்த்து விட்டதில் சிந்தனை மரத்துப் போய்விடுகின்றது.

வெளிச்சத்தின் விலாசம் எதுவாக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும்.

ஆனால் இருள் சேரும் நேரங்களில்தான் நமக்கு விளக்குகள் அதிகம் தேவைப்படுகின்றன.

ஒரு கற்பனைக்காக அந்த ஆறு நாட்களும் பூரண இருட்டைச் சந்தித்தால் என்னவாகும்?
பலநாடுகள் தொடர் இரவுப் புரட்சியை சந்தித்திருக்கும். சிலநாடுகள் பகல் தெரியாத புதிய தலைவர்களை கொண்டிருக்கும். ஏராளமான வீடுகள் மிகவும் கரிசனையுடன் எதிர்கால வாரிசுகளை தமக்காக்கத் தொடங்கியிருக்கும். இரவு தொடங்கி விடிய விடிய இணையத்தில் இணைபவர்கள் விடிவே இல்லாமல் பேசியிருப்பர். பொழுதோடு தூங்கி பொழுதோடு எழு என்ற நச்சரிப்பு இன்றி கனவில் வாழ்பவர் சொர்க்கமடைந்திருப்பர். போகி, ரோகி, யோகி என்ற மூன்று வர்க்கமும் விரும்பும் இருள் தூக்கத்தைத் தொலைக்க உறுதுணையாக இருந்திருக்கும்.

இருள் என்றால் ஒன்றுமே இல்லை என்றும் அர்த்தம் உண்டு. ஏதோ இருந்தால் கூட அது உங்களை ஏதாவது செய்யலாம். ஆனால் எதுவுமே இல்லாத ஒன்று உங்களை என்ன செய்து விட முடியும். இருளைக் கண்டு எதற்கு பயப்பட வேண்டும்?

சரி'அந்த ஆறு நாட்களின் பின் முதன் முதலாக தெரியும் சூரிய ஒளிக்கீற்று எப்படி வரவேற்கப்படும்?

கடவுளின் கண்மலர் என்பார்கள் ஆன்மீகிகள். உண்மையின் புன்னகையாகக் காண்போர் அரசியல்வாதிகள்.காதலின் நிழல் என தெரியும் கலைஞர்களுக்கு. அறத்தின் வெற்றி – ஊடகவியலாளர்களுக்கு. இளமையின் திமிர் வெளிச்சத்தில் பிழைப்பவர்களுக்கு!

உலக ஊடகங்கள் அனைத்தும் முக்கியத்துவம் கொடுத்திருந்த நாசாவி ின் பிரபல அந்த அறிக்கையை தமிழர் தகவல் நவம்பர் இதழின் எட்டாம் பக்கத்திலிருந்து தெரியாதவர்களுக்காக அப்படியே தருவது இருளிலிருந்து ஒளிக்கு எடுத்து வரும் அக விளக்காகும் – அகல் விளக்காகும்.

**கடந்த மாதம் தமிழர் தகவலில் வெளியான செய்தி கீழே:**

**அடுத்த மாதம் ஆறு நாட்கள் சூரிய வெளிச்சம் இல்லாது உலகம் இருள் மயமாகும்.**

*அடுத்த மாதம் (டிசம்பர்) 16ம் திகதி முதல் 22ம் திகதி வரையான ஆறு நாட்கள் உலகம் சூரிய வெளிச்சமின்றி இருளில் மூழ்கப் போவதாக அமெரிக்க 'நாசா'வின் தலைவர் சார்ல்ஸ் போல்டன் அறிவித்துள்ளார். இந்த ஆறு நாட்களில் பயங்கர சூரிய மண்டலப் புயல் வீசப் போவதாகவும், இதனால் ஏற்படும் தூசு மற்றும் துகள்களால் சூரிய ஒளி பூமிக்கு வருவது தடைப்படும் எனவும் இவர் தெரிவித்துள்ளார். 250 வருடங்களில் ஏற்படப் போகின்ற மிகப் பெரிய சூரிய மண்டலப் புயல் இதுவாகும். 216 மணித்தியாலங்கள் சூரிய வெளிச்சமின்றி உலகம் இருளில் மூழ்கப் போவதால், இந்த ஆறு நாட்களும் மின்சார வெளிச்சத்திலேயே பூமியிலான சகல செயற்பாடுகளும் இடம் பெற வேண்டி வரும்.●*

## சிறியரக விமான விபத்தில் இரு தமிழ் இளைஞர் பலி

ஒன்ராறியோ மாகாணத்தில் கடந்த மாதம் 17ம் திகதி சிறியரக 'செஸனா' விமானமொன்று பறந்து கொண்டிருக் - கையில் விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த இரண்டு தமிழ் இளைஞர்களும் பலியாக நேர்ந்தது. லோகேஷ் லஷ்மிகாந்தன (25), ரவீந்திரன் அருளானந்தம் (31) என இறந்தவர்கள் இருவரும் அசையாளம் காணப்பட்டனர். லோகேஷ் விமான ஓட்டிப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கையில், எரிபொருள் இல்லாமையால் விமானம் விபத்திற்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்னையா விவேகானந்தன்

# ஆழ வேரூன்றிய அகதி வாழ்வு

21

மனிதருக்கிடையேயான ஒத்த உரிமைகள் குறித்து நாள்தோறும் புதிய சிந்தனைகள் உருவாகின்றன. அடிப்படை மனித உரிமைகளைப் பேணவெனப் பல்வகைச் சட்டங்களும் அவை தொடர்பான விவாதங்களும் இன்றுவரை தொடர்ந்தவண்ணமே உள்ளன.

ஆயினும் உலகெங்கும் உழைப்பாளிகளை உறிஞ்சும் முதலாளித்துவம் பல வண்ண வடிவங்களாகக் கோலங்கொண்டு வளமோடு கோலோச்சி வருகின்றது. இதன் கோரப்பசிக்குத் தீனிகளாகவே அகதிகள் எனப்பட்டோர் பெரிதும் பயன்பட்டனர்.

இக்காலத்தைப் போன்ற கூட்டு நிறுவன முறைமை (co-operate) அக்காலத்தில் பெரிதும் இல்லாதிருந்தாலும் நிறுவன முறைமை வலிமையுற்றிருந்தது. அகதிகளாக வந்தோரின் பொருளாதாரத் தேவைகளும், மொழியறிவு இன்மையும் இந்த நிறுவனங்கள் உழைப்பைச் சுரண்டுவதற்கு வாய்ப்பாக இருந்தன.

மணிவண்ணன் என்ற கவிஞர் 'வீதியும் செம்மண் கால்களும்' என்ற தனது நீண்ட கவிதையில் ஒரு நிறுவனத்தின் உழைப்புச் சுரண்டலை அழகுறக் கூறுகின்றார்.

"தசை விழுங்கும்
இரு முதலாளிகளின்
தடித்த வாய்களின் கீழ்
ஓர் தையற்கடை இயங்குகின்றது.
ஆபிரிக்க இளைஞன் ஒருவன்
ஆடை தைக்கத் தொடங்கினான்.

உடுப்புக் கட்டொன்றை எடுத்தான்
வெட்டிய பாகங்களை மூட்டினான்.

மூட்டிய பாகங்கள்
மடித்தும்
பிளந்தும்
ஒரு துர்க்கிய இளைஞனால்
அயன் பிடிக்கப்பட்டன
அரபுப்பெண்
பொக்கற்றுகளைப் போட்டுக்கொடுத்தாள்
.................
ஓர் சீனுவா இளைஞனால்
தெறி ஓட்டைகளும்
தெறிகளும்
அடிக்கப்பட்டன.
சிறிலங்கனால்
ஆடை அயன் பிடிக்கப்பட்டு
துர்க்கியப் பெண்ணால்
நூல்கள் வெட்டப்பட்டு
உறையிடப்படுகின்றது ஆடை
53% Polyester
43% Laine
4% Lycra
Made in France"

தைக்கப்பட்ட துணி கூடப் பிறிதொரு நாட்டில் இருந்தே வந்திருக்கக் கூடும். பல நாட்டாரின் கூட்டுழைப்பில் உருவாகும் பொருள் குறித்த முதலாளிக்கே உரியதாகி விடுகின்றது. இதுவே முதலாளித்துவத்தின் பண்பு. ஆயினும் அடிப்படை ஊதியத்திற்காக மாடாய் உழைத்தவர்களாக நம் முன்னோர் இருந்தனர்.

பல வாழ்புலங்களிலும் ஈழத்தோர் நல்ல உழைப்பாளிகள் எனப் பெயர் பெற்றிருந்தனர். பல வேலைகளை விரைவாகக் கற்றுக்கொண்டு மேலே மேலே முன்னேறினர். பிற இனத்தோர் வியக்கும் வகையில் ஈழத்தமிழரின் பொருளாதார எழுச்சி பேருருக் கொண்டது.

பின்னாளில் தாமே பல்வேறு தொழிற்றுறைகளை உருவாக்கி வேறு பலருக்கும் வேலை வாய்ப்புகளை வழங்கியிருக்கின்றனர்.

தொடக்க காலத்தில் பெரிதும் திருமணமாகாத அல்லது மனைவியரைத் தாயகத்தில் விட்டு வந்த ஆண்களே புலம்பெயர்ந்திருந்தனர். தமது கடும் உழைப்பால் பொருள் சேர்த்து திருமணங்கள் செய்து குடும்ப வாழ்வாக பயணத்தை மெருகேற்றிக் கொண்டனர். திருமணம் செய்திருந்தோர் குடும்பத்தை வரவழைத்து பிள்ளைகளின் முன்னேற்றத்திலும் பேரார்வம் காட்டினர்.

ஏறக்குறைய கால்நூற்றாண்டுக்குப் பின்னர் ஆழ வேரூன்றிய ஆலமரமாக புலம்பெயர்ந்தோர் சமூகம் இன்று வலிமையோடு எழுந்து நிற்கின்றது.●

## கனடிய நாடாளுமன்ற 'தேர்தல் காய்ச்சல்'

அடுத்தாண்டு பிற்பகுதியில் நடைபெறவிருக்கும் கனடிய நாடாளு - மன்றத் தேர்தலுக்குத் தங்களைத் தயார்படுத்தும் தீவிர பிரசாரத்தில் மூன்று பிரதான கட்சிகளும் ஈடுபட்டுள்ளன. அபேட்சகர்கள் தெரிவு, நிதி சேகரிப்பு, புதிய உறுப்பினர்கள் இணைப்பு என்றவாறு வேலைகள் வேகப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் கட்சிகளின் தலைவர்கள் மாகாண ரீதியான பயணங்களை அடிக்கடி மேற்கொண்டு வருவதையும் காணமுடிகின்றது. எதிர்க் - கட்சியாகவிருக்கும் என் டி. பி ஆட்சியைக் கைப்பற்ற விரும்புகின்றது. ஆனால், ஸ்டீபன் ஹாப்பரின் கன்சர்வேடிவ் அடுத்த தடவையும் ஆட்சியைத் தம்வசம் தக்கவைக்க முயற்சிக்கின்றது. மறுபுறத்தில், மூன்றாவது இடத்தில் நிற்கும் லிபரல் கட்சி எப்படியாவது இம்முறை ஆட்சியைத் தம்வசமாக்க வேண்டுமென ஆர்வம்காட்டி வருகின்றது. கனடிய மத்திய அரசுக்கான 'தேர்தல் காய்ச்சல்' ஒரு வருடத்துக்கு முன்னராகவே ஆரம்பமாகிவிட்டதை அவதானிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## அர்த்தம் புரியாது மாறியுள்ள 'ஐ லைக் இற்.... ஐ லைக் இற்'

கடந்த மாதம் ஒரு முக்கிய பிரமுகர் கனடாவில் காலாமானார். இந்தத் துக்கமான தகவலை அவரது நெருங்கிய நண்பர் தமது முகநூலில் பதிவிடுவார் என்று எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றம்.

இதனை அவரிடமே கேட்டபோது அவர் கூறிய காரணம், எங்கடை சனங்களின்ரை போக்கை எண்ணித் தலைகுனிய வைத்தது.

"முகநூலில் மரணத்தகவலை பதிவிட்டால் படிப்பவர்கள் 'ஐ லைக் இற்' என்று தங்கள் பாராட்டைத் தெரிவிக்கிறார்கள். இதனை எப்படித் தடுப்பது? என்பதே அவரது கேள்வி.

எங்கடை ஆக்களுக்கு இப்ப எல்லாமே 'லைக்' ஆகிவிட்டதால், மரணமும் 'லைக்' ஆகிவிட்டதுபோலும்!

குறிப்பு: *முகநூல் பாவிக்கும் பலரது முறைப்பாடு இவ்வாறானதாக இருப்பதை அடிக்கடி கேட்கக்கூடியதாக இருக்கின்றது.*

## எம்மவர் இணையத் தளங்களில் படங்கள் படும்பாடு பெரும்பாடு!

தமிழர் மத்தியிலுள்ள ஓரிரு இணையத். தளங்கள் பற்றிய சில சுவைத்தகவல்கள்:

1. பொது வைபவங்களில் தங்களுக்கு விளம்பரங்கள் தருபவர்களைக் கண்டால் அவர்களை வெவ்வேறு விதமாகப் படம் எடுத்து தளத்தில் ஏற்றிப் பணம் கறப்பது.

2. 'லைட்' அடிக்காத கமராவைப் பயன்படுத்தி சிலரை அவர்களுக்குத் தெரியாமலே படம் எடுத்து வேறு சிலருக்கு ரகசியமாக விநியோகிப்பது (விற்பனை செய்வது).

3. பொது நிகழ்வுகளில் பங்கேற்கும் சில பெண்களைக் கவர்ச்சி காட்டும் கோணத்தில் அவர்கள் அறியாத வண்ணம் படமெடுத்து, தளத்தில் ஏற்றி அழகுபடுத்திப் பார்ப்பது.

ரொறன்ரோவில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் ஊடகப் பிரமுகர் ஒருவர் சுட்டிக்காட்டியவற்றுள் முக்கியமான மூன்று அம்சங்கள் இவை.

## பார்க்கும் இடமெங்கணும் நீக்கமற நிறைந்துள்ள பான....

யாழ்ப்பாணப் பெருங்குடிமக்கள் தொடர்பாகக் கடந்த மாத இதழில் வெளிவந்த விபரம் தொடர்பாக யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் தொலைபேசியில் தந்த தகவல்:

இங்கே எங்களைச் சுற்றி முப்பது மதுபான விற்பனை நிலையங்கள் ஓகோ என்று இயங்குகின்றன. அனேகமான உயர் பாட-சாலைகளுக்கு அருகிலும் சராசரியாக இரண்டு. இப்போ இங்கு 'வெளிநாட்டுச் சரக்குகளுக்கே' கியாதி அதிகம்.......

## ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பு உலக கழிவறைத் தினத்தில்!

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பில் மகிந்த ராஜபக்ஷ நவம்பர் 19ல் அதிகாரபூர்வமாக கையெழுத்திட்டார். அன்றைய தினமே உலக கழிவறைத் தினமாகும்.

ஐ. நா இதனை அறிமுகம் செய்த நோக்கம், ஒவ்வொருவருக்கும் கழிவறை கட்டாயம் என்பதை நினைவூட்டவே.

ஆனால் சோதிடத்தை நம்பி நாள் குறிக்கும் மகிந்த, அது கழிவறைநாள் என்பதை கவனிக்கவில்லையாம்! பாவம்...

## எதிரியைத் தேடியவருக்கு எதிரி உள்ளே இருந்தது.....

"எனக்கு எதிராகப் போட்டியிடுபவரை விரைவாக அறிவியுங்கள். நிழல் வீரருடன் என்னால் யுத்தம் புரிய முடியாது" என எதிர்க் கட்சிகளைப் பார்த்து நக்கல் பாணியில் சீண்டி வந்த மகிந்த, அந்த எதிரி யார் என்பது தெரியவந்தபோது அதிர்ச்சியில் ஆழ்ந்துபோனார்

தமது சுதந்திரக் கட்சியின் செயலாளரும் தமது அமைச்சருமான மைத்திரிபாலவே அந்த எதிர் வேட்பாளர் என்றால், இரத்த அழுத்தம் அதிகரிக்கும்தானே!

ஆளும் கட்சியின் தலைவரை எதிர்த்து, அக்கட்சியின் செயலாளர் போட்டியிடுவது என்றால்...சும்மா சொல்லக்கூடாது - மகிந்தவுக்கு இது மரண அடிதான்!

***உதாசனன் உலா விருந்து***

## சரத் பொன்சேகாவின் கட்டில் மைத்திரிக்கு காத்திருக்கிறது!

சிறைச்சாலையில் தாம் பாவித்த கட்டில் இப்போது எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் வருகைக்குக் காத்திருப்பதாக பொதுக்கூட்டமொன்றில் வைத்து அறிவித்துள்ளார் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா.

இதன் அர்த்தம் புரிகிறது. கோதபாயவின் நாடி பிடித்துப் பார்த்து இதனை சரத் பொன்சேகா சொல்கிறாரா?

அல்லது மைத்திரிபால 'உள்ளே' தள்ளப்பட வேண்டுமென்ற தமது உள்விருப்பத்தை இப்படிப் பூடகமாக அரச அணிக்கு வெளிப்படுத்துகிறாரோ!

## மைத்திரியின் மூன்று மயிரும் மகிந்தவின் வெள்ளை மீசையும்!

"மைத்திரிபால சிறிசேன என்ற மூன்று மயிர் போனதற்கு நாங்கள் கவலைப்பட மாட்டோம். ஜனவரி 8ம் திகதிக்குப் பின்னர் அவருக்கு ஒரு மயிரும் மிஞ்சாது" என்று நாடாளுமன்றில் பிரதமர் டி. எம் ஜெயரத்தின கூறியுள்ளார்.

இதற்கு ஒரு சிங்களவர் தமது டுவிட்டரில் பின்வருமாறு எழுதியுள்ளார்: " தேர்தலில் மகிந்த தோற்பது நிச்சயம். அதன் பிறகு அவரது மீசைக்கும் தலைமயிருக்கும் தினமும் கறுப்பு மை பூசுவதற்குப் பணம் கொடுக்கப்போவது யார்?" என்பது இவரது கேள்வி.

செய்தி: *மகிந்தவின் மயிர்களுக்கு தினசரி காலையில் கறுப்பு மை பூசவென அலரி மாளிகையில் ஒருவர் மாதம் 50,000 ரூபா சம்பளத்தில் பணியாற்றுகிறாராம்.*

## யாழ். கட்டளைத் தளபதிக்கு பிரபாவின் பிறந்தநாள் பரிசு!

யாழ். மாவட்ட ராணுவ கட்டளைத் தளபதியாகவிருந்து அட்டகாசங்களைப் புரிந்த உதய பெரேரா கடந்த மாதம் 26ம் திகதி திடீரென கொழும்புக்கு மாற்றம் செய்யப்பட்டார்.

இதனைச் செய்தியாகப் பிரசுரித்த யாழ்ப்பாணம் உதயன் பத்ரிகை, இதற்கிட்ட தலைப்பு என்ன தெரியுமா? 'பிரபாவின் பிறந்த நாள் பரிசாக யாழ். ராணுவத் தளபதி இடமாற்றம்' என்பது.

'காகமும் பனம்பழமும்' கதையாக இது இருந்தாலும், தலைப்பில் ஊடகச்சுவை பளிச்சிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ராஜ்மோகன்

# பணிலமாடம் 9

## பாவம் ஆண்கள்

ஆண்கள் உண்மையில் பாவம்தான். இயற்கை கூட பெண்களுக்கு ஆதரவாகத்தான் செயற்படுகின்றது!

எந்தவொரு நாட்டிலும் அதிக காலம் உயிர் வாழும் வரத்தைப் பெற்றவர்கள் பெண்கள் என்பது மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது. உலகிலுள்ள நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணிப்பீட்டின் படி பெண்கள் தான் அதிகமான ஆயுள் காலத்தைக் கொண்டு அமோகமாக வாழ்ந்து வருகின்றார்கள். ஆரோக்கியமான பாதையில் பயணிக்கும் இவர்களின் வாழ்க்கை சிறப்புக்குரியது.

பெண்களின் ஆயுள் காலத்தை நாடுகளின் ரீதியில் ஒப்பிட்டுப் பார்த்தால், ஜப்பானி யப் பெண்களே மொத்த உலகில் மிக அதிகமான ஆயுள் கால வயதுகளைக் கொண்டிருக்கின்றார்கள். சராசரியாக 86.1 வருடங்கள் உயிர் வாழும் ஜப்பானியப் பெண்கள் கடந்த 25 வருடங்களாக இந்தத் தொடர் சாதனையை தம்வசம் வைத்திருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக அதி கூடிய வாழ்நாட்களைக் கொண்ட பெண்கள் வாழும் இடம் சுவிற்சர்லாந்து. இங்கு இருக்கும் பெண்களின் சராசரி உயிர் வாழும் வயது 85.3 வருடங்களாகும். மூன்றாவது இடத்தில் 85 சராசரி வயதுகளுடன் ஸ்பெயினும், அன்டோராவும் (Andorra), மொனாக்காவும் (Monaca) உள்ளன.

(ஒன்ராறியோவில் வசிக்கும் பெண்களே ரொம்பவும் பதற்றப்பட வேண்டாம். உங்களின் ஆயுள் காலம் தாராளமாகத்தான் இருக்கின்றது)

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் சராசரிப் பெண்களின் ஆயுள் காலம் 83.92 ஆண்டுகளாக இருப்பதாக தரவுகள் தெரிவிக்கின்றன. கியூபெக் மாகாணத்தில் இது 83.55 ஆக இருக்கின்றது. ஆகக் குறைந்த வயதில் மரணத்தை எதிர்கொள்ளும் பெண்கள் இருக்கும் கனடிய மாகாணம் நுனாவுட் (Nunavut) ஆகும். இங்கு சராசரியாக 73.91 ஆண்டுகளே பெண்கள் உயிர் வாழ்கின்றார்கள்.

ஆனால், பெண்கள் ஆகக் குறைந்த அளவில் உயிர் வாழும் வயதைக் கொண்ட பாவப்பட்ட நாடுகளில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது ஆபிரிக்கா கண்டத்தில் அமைந்திருக்கும் சியாரா லியோன் குடியரசு (Sierra Leone) என்ற நாடு.

இங்கு வாழும் பெண்களின் அதி கூடிய ஆயுள் காலம் ஆக 47 வருடங்கள் மட்டுமே. இதற்கு அடுத்த படியாக 50 வயதுடன் மத்திய ஆபிரிக்க குடியரசும், லேசோத்தோவும் (Lesotho) உள்ளன. மேலும் 51 வயதுடன் கொங்கோவும் (Congo) சுவாசிலாந்தும் (Swaziland) உள்ளன. இந்த நாடுகள் அனைத்தும் ஆபிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்தவை.

இனி ஆண்களின் ஆயுள் காலம் பற்றி நோக்கினால், அதிக வருடங்கள் உயிர் வாழும் ஆண்களைக் கொண்ட நாடு கட்டார் (Qatar) ஆகும். இங்கு ஆண்கள் உயிர் வாழும் ஆண்டுகள் சராசரியாக 83 ஆகும். அடுத்த வரிசையில் 82 வருடங்களுடன் சான் மரினோவும் (San Marino), மூன்றாவது இடத்தில் ஐஸ்லாந்து 81 அதிகூடிய ஆயுள் காலத்துடனும் இருக்கின்றன. சிங்கப்பூரும், அவுஸ்திரேலியாவும் 80 வருடங்களுடன் 4 ஆம் 5 ஆம் இடங்களில் உள்ளன.

ஆண்கள் ஆகக் குறைந்த அளவில் உயிர் வாழும் வயதைக் கொண்ட நாடுகளில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது சியாரா லியோன் குடியரசு (Sierra Leone) ஆகும். இங்கு வாழும் ஆண்களின் அதி கூடிய ஆயுள் காலம் ஆக 46 வருடங்கள் மட்டுமே.

இதற்கு அடுத்த படியாக 47 வயதுடன் மத்திய ஆபிரிக்கக் குடியரசும், 48 வயதுடன் கொங்கோவும், சோமாலியாவும் உள்ளன. அற்ப வயதில் மரணத்தைத் தழுவும் இந்த நாடுகளில் உள்ள வறுமையும், போசாக்கின்மையும், மருத்துவ வசதிகளின்மையும் இதற்குரிய முக்கிய காரணங்களாகக் கூறப்படுகின்றன.

ஆண்களும், பெண்களும் அடங்கிய மொத்தக் கணக்கெடுப்பில் உலகில் உள்ள மனிதர்களின் சராசரி உயிர்வாழும் வயதெல்லை 70 வருடங்கள் என்று கணிப்பிடப்பட்டுள்ளது. இதே கணிப்பீட்டை நாடுகளின் ரீதியில் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மீண்டும் ஜப்பான் 83 அதிகூடிய வயதெல்லையுடன் முதலிடத்தில் உள்ளது. இரண்டாம் இடத்தில் சான் மரினோவும் அதற்கடுத்ததாக சுவிற்சர்லாந்தும் உள்ளன.

கனடா 82 ஆண்டுகள் ஆயுள் கால வயதெல்லைகளுடன் உலகின் எட்டாவது இடத்தில் உள்ளது. அமெரிக்க மக்களின் அதிகூடிய ஆயுள் காலம் 79 வருடங்கள் மட்டுமே. இது தெரிவு செய்யப்பட்ட, அதிக காலம் மனிதர்கள் உயிர் வாழும் 15 நாடுகளுக்குள் அடங்கவில்லை.

போசாக்கு நிறைந்த உணவுகள், சிறந்த மருத்துவ வசதிகள், தனிப்பட்ட மனிதர்களின் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வுகள் மற்றும் உயர்ந்த வாழ்க்கைத் தரம் போன்ற பல காரணங்களினால் பல நாடுகளில் உள்ள மனிதர்களின் ஆயுள் காலம் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. நவீன மருத்துவ வசதிகள் மூலம் வயதானவர்களின் இறப்பு விகிதம் மேலும் குறைவடைந்து அநேகமான மக்கள் அதிக காலம் உயிர் வாழும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் தற்போது குறைவடைந்து கொண்டு போகும் குழந்தைகள் பிறக்கும் விகிதம், வயதானவர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்துவிடும் எனவும், இது ஒரு சமுதாய சமநிலைக் குழப்பத்தை ஏற்படுத்தலாமெனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. (தகவல் - கனடா புள்ளிவிபரத் திணைக்களம்)●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா. சம்பந்தன்



# ஏகலைவனும் ஏ.கே. 47உம்

மகா பாரதக் கதையிலே பாண்டவர்கள் மற்றும் கௌரவர்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுக்க நியமிக்கப்பட்ட துரோணர் தன் மாணவர்களில் அருச்சுனனுக்கு மட்டும் தன் தனிப்பட்ட பிரியத்தினால் ஒரு அம்பு ஆயிரம் துளையிடும் வித்தையைக் கற்பித்து, இந்த வித்தை வேறு யாருக்குமே தெரியாது என்றும் சொல்லியிருந்தார்'

ஒருமுறை அருச்சுனன் காட்டில் வேட்டை ஆடச் சென்ற போது அவனுடைய நாயொன்றை ஏகலைவன் என்ற வேட்டுவ இளைஞன் அம்பினால் தாக்கிக் கொன்றுவிட்டான்' இறந்து போன நாயை அருகில் சென்று பார்த்த அருச்சுனன் ஒரு அம்பு ஆயிரம் துளையிடும் வித்தை தன் நாயின் மீது பயன்படுத்தப்பட்டு இருப்பதைக் கண்டு மிகுந்த கவலை அடைந்தான்'

தனக்கு மட்டுமே தெரிந்த வித்தை இன்னொருவனுக்கும் தன் குரு துரோணரால் சொல்லிக் கொடுக்கப்பட்டு இருப்பதாக நினைத்து மிகுந்த துன்பம் அடைந்தான். அவனுடைய கவலையைக் கேட்டறிந்த துரோணர் அவனையும் அழைத்துக் கொண்டு ஏகலைவன் வாழ்ந்த காட்டுக்குச் சென்றார்'

இரணிய தனுஸ் என்ற வேடர் தலைவனின் மகனான அந்த ஏகலைவன் தன்னிடம் ஒருமுறை வில்வித்தை பயில வந்த போது, அவன் தாழ்ந்த சாதிக்காரன் என்ற காரணத்துக்காக அவனுக்கு ஆயுதப் பயிற்சி வழங்க மறுத்து திருப்பி அனுப்பியிருந்தார் துரோணர்'

திரும்பிச் சென்ற ஏகலைவன் காட்டிலே துரோணருக்குக் கோவில் அமைத்து அவரின் உருவச் சிலையை வைத்து வணங்கி, அச்சிலை முன்பாக ஆயுதப் பயிற்சி செய்து வந்தான்' அவனின் குரு பக்தியினால் சில ஆயுதப் பிரயோக இரகசியங்கள் இயல்பாகவே அவன் மனத்தில் உதித்தன'

அருச்சுனனின் நாய் தன் குருநாதர் சிலைக்கு அசுத்தம் செய்ததால் அதை ஏகலைவன் கொன்றுவிட்டான்'

ஏகலைவனைத் தேடிக் காட்டுக்கு வந்த துரோணர் அவன் கோவிலையும் பக்தியையும் கண்டார்' அரச வம்சத்தவரோடும் குறிப்பாக அருச்சுனனோடும் மிகுந்த பிரியத்தை வளர்த்து வைத்திருந்த பிராமணராகிய துரோணரின் மனத்தை ஏகலைவனின் பக்தியும் பணிவும் தொடவில்லை'
தன் மாணவனான அருச்சுனனுக்குப் போட்டியாக எல்லாம் தெரிந்த வில்லாளி ஒருவன் உருவாவதை துரோணர் விரும்பவில்லை' அதனால் தன் முன்னால் பணிந்து வணங்கி நின்ற ஏகலைவனிடம், "ஏகலைவா' நான் உன் குரு என்பது உண்மையானால், நான் கேட்கும் குரு தட்சணையைத் தருவாயா?" என்று கேட்டார்'

குருவே' நீங்கள் எதைக் கேட்டாலும் தருவேன் என்றான் அந்த வேட்டுவ இளைஞன்'

நல்லது' அப்படியானால் உனது வலது கையின் கட்டை விரலை எனக்குத் தானமாகக் கொடு என்றார் துரோணர்' மறுகணமே தன் இடுப்பில் இருந்த கத்தியை எடுத்து தன் வலது கைப்பெருவிரலை வெட்டி, துரோணரின் பாதத்தில் வைத்துவிட்டான் ஏகலைவன்'

ஏகலைவன் விரலோடு காட்டை விட்டு வெளியேறிய துரோணர் தன்கூட வந்த அருச்சுனனிடம், "அருச்சுனா' குறிபார்த்து அம்பு செலுத்துவதற்கு இன்றியமையாத கட்டை விரல் ஏகலைவனுக்கு இல்லாமல் போய்விட்டது' இனி அவன் என்ன முயற்சி செய்தாலும் முன்பு போல மிகப்பெரிய வில்லாளியாக விளங்க முடியாது' இப்போது உனது கவலை தீர்ந்ததா?" என்று கேட்டார்'
இவ்வளவும் பாரதத்தில் காணப்படும் ஒரு கிளைக்கதை'

ஏகலைவன் என்று ஒரு கிராதன், முனியைத் தனி இறைஞ்சி, இவன்

ஏவலின் வழான்
ஆகலை அடைந்து, மிகு பத்தியொடு, நாள்தொறும் அருச்சுனனை

ஒத்து வருவான்,
மேகலை நெடுங் கடல் வளைந்த தரணிக்கண் ஒரு வில்லி என

வின்மை உடையான்,
மா கலை நிறைந்து, குரு தக்கிணை வலக்கையினில் வல் விரல்

வழங்கியுளனால். (வில்லி பாரதம் )

இந்தக் கதையிலே மிக முக்கியான ஒரு விடயம் பேசப்படுகின்றது'

ஒரு அம்பு ஆயிரம் துளை இட்ட செய்திதான் அது'

எஸ். எல் .ஆர் எனப்படும் ஒற்றைத் துப்பாக்கி பற்றிக் கனவு கூடக் காணாத இந்தியாவிலே வில்லில் இருந்து புறப்பட்ட ஒரு கணை இலக்கைத் தாக்கும் நேரத்தில், ஆயிரமாக உருவெடுத்து சல்லடையாக துளைத்த செய்தி இங்கே ஒரு இதிகாசத்திலே பேசப்படுகின்றது இல்லையா?

எல்லா இதிகாச யுத்தங்களிலும் ஆயுதங்கள் மந்திரித்து ஏவப்பட்டன என்கிறார்களே, அது என்ன?

ஒவ்வொரு ஆயுதத்தைச் செலுத்தும் போதும் அதற்குரிய மந்திரங்கள் உச்சரிக்கப்பட்டன என்றால் அது வேறு ஒன்றும் இல்லை' அவர்கள் மந்திரங்கள் என்று குறிப்பிட்டது இன்றைய ஆயுதங்களுக்கான pass word முறையைத்தான்'

அவர்களிடமும் ஒவ்வொன்றுக்கும் pass word இருந்தது மந்திரங்கள் என்ற பெயரோடு' அதனால் தான் இன்றைய pass wordகள் குறைந்தது ஐந்தாறு எழுத்துக்களில் அமைவது போல அன்றும் மந்திரங்கள் சிவாய நம என்றும் சரவணபவ என்றும் ஐந்தாறு எழுத்துக்களைக் கொண்டிருந்தன போலும்'

எனவே இன்றைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளான ஏ.கே.47 போன்ற நவீன ஆயுதங்கள் எல்லாம் பாரத யுத்தத்திலே பயன்படுத்திக் கழிக்கப்பட்டவை என்றால் அது மிகையாகாது' ஏனெனில் அன்றைய பாசுபதம் என்ற சிவாஸ்திரத்தின் செயற்பாட்டுக்கும் இன்றைய பொஸ்பரஸ் குண்டின் செயற்பாட்டுக்கும் இடையே விளைவுகளில் பெரிய வேறுபாடு காணப்படவில்லை'

பாஸ்பதம், பொஸ்பரஸ் என்ற சொற்களுக்கிடையிலும் ஓசையில் பெரிய வித்தியாசம் இல்லை' கவனித்தீர்களா?●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குரு அரவிந்தன்

# பெற்ரோனாஸ் கோபுரங்கள்

9

ஒவ்வொரு நாட்டிலும் ஏதாவது குறிப்பிடத்தக்க ஞபகச் சின்னங்கள் இருப்பது போல, மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரிலும் உயர்ந்த கோபுரம் ஒன்று இருக்கின்றது. ஆனால் இது இரட்டைக் கோபுரமாகக் கட்டப் பட்டிருக்கின்றது. இது கோலாலம்பூரின் பிரபலமான சிற்றி சென்ரரில் அமைந்திருக்கின்றது. பெற்ரோனாஸ் கோபுரம் (Petronas Towers) என்று அழைக்கப்படும் இந்தக் கோபுரம் இன்று இருக்கும் இரட்டைக் கோபுரங்களில் அதிக உயரமானது. பெற்ரோனாஸ் என்றழைக்கப்படும் பிரபல எண்ணெய்க் கம்பனியால் தங்கள் நிர்வாகத்தை ஓரிடத்தில் இருந்து செயற்படுத்துவதற்காக, இந்தக் கோபுரம் கட்டப்பட்டது.



கோலாலம்பூரில் 390, 000 சதுரமீட்டர் பரப்பளவில் அமைந்திருக்கும் இந்தக் கோபுரத்தை ருவின்டவர் என்றும் உள்ளூர் மக்கள் அழைக்கின்றார்கள். இஸ்லாமிய சின்னமான எட்டு முனை கொண்ட நட்சத்திரம்போல இதன் அடித்தளம் அமைக்கப்பட்டது. இந்தக் கோபுரத்திற்கான நிர்மாண வேலைகள் 1992ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. இதன் வெளி அமைப்பைக் கட்டி முடிப்பதற்குச் சுமார் மூன்று வருடங்களுக்கு மேல் எடுத்தன.

1996 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கட்டி முடிக்கப் பட்டாலும் 1999ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதிதான் அதிகார பூர்வமாக இந்தக் கோபுரம் திறந்து வைக்கப்பட்டது. அப்போது மலேசியாவின் நாலாவது பிரதமராக இருந்த டாக்டர் டட்தோ மகாதீர் மொகமட் அவர்கள் அதிகார பூர்வமாக இந்தக் கோபுரத்தைத் திறந்து வைத்தார். இந்தக் கட்டிடத்தைக் கட்டி முடிப்பதற்குச் சுமார் 1.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டதாகத் தெரிகின்றது. 1998 ஆம் ஆண்டில் இருந்து 2004 ஆம் ஆண்டு வரை அதி உயரமான கோபுரமாக இது இருந்தது. 2004ஆம் ஆண்டு தைப்பி 101 கோபுரம் தைவான் நாட்டில் கட்டப்பட்டதால் இந்தக் கோபுரம் இரண்டாவது இடத்திற்குப் பின் தள்ளப்பட்டது.

ஆனாலும் நியூயோர்க்கில் இருந்த உலக வர்த்தக இரட்டைக் கோபுரத்தின் அனர்த்தத்திற்குப் பின், இரட்டைக் கோபுரத்தில் அதி உயரமானதாக இப்பெழுதும் பெற்ரோனாஸ் கோபுரம் தான் இருக்கின்றது.

இந்தக் கோபுரங்களை விரைவாகக் கட்டி முடிக்க வேண்டும் என்பதால் இரண்டு கோபுரங்களும் தனித்தனியே இரண்டு முக்கிய நிறுவனங்களிடம் பொறுப்புக் கொடுக்கப்பட்டது. முதலாவது கோபுரத்தை யப்பானிய நிறுவனமான ஹஸாமா நிறுவனமும், இரண்டாவது கோபுரத்தை தென்கொரியா நிறுவனமான சாம்சுங் இஞ்சினியறிங் நிறுவனமுமம் பொறுப்பெடுத்து கட்டி முடித்தனர். கிட்டத்தட்ட 452 மீற்றர் உயரம் உள்ள இந்தக் கட்டிடம் 88 மாடிகளைக் கொண்டது. இந்த இரட்டைக் கட்டிடத்தின் நீளம் 58.4 மீற்றர்களாகும். இந்தக் கோபுரத்தின் 41ஆம் 42ஆம் மாடிகளில், இரண்டு கோபுரங்களையும் இணைக்கும் பாலம் அமைந்திருக் - கின்றது. இது தரையில் இருந்து சுமார் 170 மீற்றர் உயரத்தில் இருக்கின்றது. இந்த இரண்டு கோபுரங்களையும் இணைக்கும் இந்தப் பாலம் மிகவும் கவனமாகவும், உள்ளே மிகவும் அழகாகவும் கட்டப்பட்டிருக்கின்றது.

இங்கு வரும் பார்வையாளர்கள் வெளிக்காட்சிளைப் பார்த்து ரசிக்கக்கூடிய வகையில் இந்தக் கோபுரத்தின் 86 வது மாடி வடிவமைக்கப் பட்டிருக்கின்றது. இந்தக் கட்டிடத்தில் 1765 படிக்கட்டுகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. 77,000 சதுர மீற்றர் அளவு கொண்ட கண்ணாடிகள் இந்தக் கட்டிடத்தின் தேவைக்காகப் பாவிக்கப்பட்டிருக்கின்றன. பொதுமக்களின் பாவனைக்காக ஒவ்வொரு கோபுரத்திலும் 29 லிப்டுகள் சேவையில் ஈடுபடுகின்றன. பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு விமானங்களை எச்சரிக்கும், எச்சரிக்கை விளக்குகளும் கோபுரத்தின் உச்சியில் பொருத்தப் பட்டிருக்கின்றன.

இதைவிட 10 லிப்டுகள் பிரத்தியேக பாவனைக்காகவும், அவசர தேவைக்காகவும் இருக்கின்றன. இவற்றில் சில லிப்டுகள் 23வது மாடிவரையும் சேவையில் ஈடுபடுத்தப் படுகின்றன. வேறுசில 37வது மாடிவரையும் சேவையில் ஈடுபடுகின்றன. இதைவிட ஒவ்வொரு கோபுரத்திலும் 213, 750 சதுர மீற்றர் வரையிலான வர்த்தகப் பாவனைக்குரிய இடங்கள் ஒதுக்கப் பட்டு இருக்கின்றன. 10 எஸ்கலேட்டர்கள் இங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன. நிலமட்டத்தின் கீழும் ஐந்து அடுக்குகள் இருக்கின்றன. நிலமட்டத்தின் கீழ் உள்ள இந்த இடத்தில் சுமார் 5,400 மோட்டார் வண்டிகள் தரித்து விடக்கூடிய வசதிகள் இருக்கின்றன.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா 'தமிழ் மிறர்' பத்திரிகையின் விருது வைபவம்



திரு. சார்ள்ஸ் தேவசகாயத்தை வெளியீட்டாளராகக் கொண்டு வெளிவரும் 'கனடா தமிழ் மிறர்' பத்திரிகையின் வருடாந்த விருதுகள் வழங்கும் இரவு விருந்துடன் கூடிய வைபவம் கடந்த மாதம் ஸ்காபரோவில் நடைபெற்றது. அதன்போது எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்களை இங்கு காணலாம்.







# முஹமத் ஹன்சீரின் 'வானொலி ஊடகவியல்' நூல் வெளியீடு

















பெரும் புலவர் முஹமத் ஹன்சீரின் 'வானொலி ஊடகவியல்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் ஸ்காபரோ சிவிக் சென்டரில் நடைபெற்றது. 'கீதவாணி' வானொலி நிலையத்தின் வெளியீடாக இந்நூல் வெளியிடப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் உணர்வலையில் எழுச்சி கொண்ட கனடியத் தமிழர் அகவத்தின் மாவீரர் தேசிய நினைவெழுச்சி







தமிழீழ மாவீரர்களைத் துதித்து வணக்கம் செலுத்தும் நவம்பர் 27ம் நாளில் வருடாந்தம் நடத்தப்படும் கனடியத் தமிழர் நினைவெழுச்சி நிகழ்வு இவ்வருடம் முன்னைய காலங்களைவிடப் புதிய சங்கற்பத்துடன் புதிய பரிமாணத்தில் புதிய வரலாறு படைத்த ஒன்றாக மார்க்கம் திடலில் நடைபெற்றது. காலை 6:30 மணிக்கு ஆரம்பமான முதல் நிகழ்வே வழமையைவிட அதிகளவானவர்கள் பங்கேற்ற ஒன்றாக அமைந்திருந்தது. அதிகூடிய மக்கள் அலையலை-யாகத் திரண்டு நான்காவதாக அமைந்த இரவு நிகழ்வில் பங்கேற்று ஒரு சாதனை நிகழ்த்தினர். மாவீரர்களின் வணக்க நினைவைக் கூறுபோட்டுப் பிளவுபடுத்த இங்குள்ள சிலர் எடுத்த முயற்சி, தேசிய உணர்வு நிறைந்த மக்களின் ஒன்றுபட்ட உணர்வு நிறைந்த பங்களிப்பின் வாயிலாக முறியடிக்கப்பட்டதை இந்நிகழ்வு எடுத்துக்காட்டியது.



ஒளிப்படங்கள்: குணா - செய்தி.கொம்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் செந்தில்மோகன் நிர்வாகத்தில் தமிழருக்கான முதலாவது விரைவு மருத்துவ நிலையம்

ஸ்காபரோவில் பிறிம்லி மருத்துவ நிலையத்தை நடத்தி வரும் டாக்டர் எஸ். செந்தில்மோகன் கனடியத் தமிழரின் நலன் கருதி 'விரைவு மருத்துவ நிலையம்' ஒன்றினை ஸ்காபரோவில் நிறுவியுள்ளார். இதன் ஆரம்ப வைபவம் கடந்த மாதம் நடைபெற்றது. திரு. பொ. கனகசபாபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற அடக்கமான இந்த நிகழ்வில் பலமட்ட கனடிய அரசியல்வாதிகளும் பொது அமைப்புகளின் பிரமுகர்களும் பங்கு - பற்றியிருந்தனர். இந்த மருத்துவ நிலையம் தொடர்பான விபரங்களை 20ம் பக்க விளம்பரத்தில் காணலாம்.










## சமூகத் தொண்டரின் பவள விழா



















கனடாவில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டு அனைவரது மதிப்பையும் பெற்றுள்ள திரு. கதிர் துரைசிங்கம் அவர்களின் பவள விழா கடந்த மாதம் ரொறன்ரோவில் சிறப்பாக நடைபெற்றது. அவரது பிள்ளைகள் மற்றும் மருமக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வில் அவரது கனடிய நண்பர்கள் உறவினர்களுடன் இங்கிலாந்தில் வசிக்கும் அவரின் நீண்டகால நண்பர்களும் கலந்து மகிழ்ந்து வாழ்த்தினர். (ஒளிப்படங்கள்: வேலா சுப்பிரமணியம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் மாவீரர்களின் பெற்றோர் மதிப்பளிப்பு








கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவத்தின் ஏற்பாட்டிலான மாவீரர்களது பெற்றோர் மதிப்பளிப்பு நிகழ்வு கடந்த மாதம் 23ம் திகதி மார்க்கம் நகரிலுள்ள இரா பலஸ் மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்கள் இங்கே.



# மாவீரர் நினைவு குருதிக் கொடை

தமிழீழ மாவீரர்களின் நினைவான குருதிக் கொடை நிகழ்ச்சியொன்றினை இவ்வருடமும் கனடியத் தமிழர் தேசிய அவை கடந்த மாதம் 22ம் திகதி நடத்தியது. கனடா கந்தசாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்வின் முக்கியத்துவத்தை இங்குள்ள மைய ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்துப் பரப்பியிருந்தது குறிப்பிடத்தக்கது.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB

## Computek College

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Est. 1991

Registered as a private career college under the Private Career Colleges Act, 2005



*Register for a Diploma Course and receive a*

*(offer valid until Dec 31, 2014 - some conditions apply)*




NOW ACCEPTING

INTERNATIONAL STUDENTS!

**WWW.COMPUTEK.EDU**

**Toronto Campus**
301-2347 Kennedy Rd.
416.321.9911

**Markham Campus**
202-7 Eastvale Dr.
905.471.3344

**Scarborough Campus**
248-2390 Eglinton Ave. E.
416.285.9941

**Diploma Programs:**

- Community Services Worker (CSW)
- Personal Support Worker (PSW)
- Early Childcare Assistant (ECA)
- Medical Office Admin. (MOA)
- Accounting & Payroll Admin.
- Computerized Accounting
- Int. Application Development
- Ent. Network Engineering
- Business Administration
- Network Engineering

**Are you unemployed or under-employed?**

Are you receiving or received EI?

Re-entering workforce after Maternity or Parental leave?

Second Career provides laid-off workers with skills training to help them find jobs in high-demand occupations in Ontario

SECOND CAREER
&
OTHER FUNDING
OPTIONS AVAILABLE
CALL FOR DETAILS

Financial assistance may be available for those who qualify




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ் 83

**வரலாற்றில் சிவ வணக்கத்தை விட திருமால் வணக்கம் பண்டு தொட்டு இருந்து வருகிறது**

பெரும்பான்மைத் தமிழர்களின் சமயம் சைவநெறியாக இருப்பதால் அவர்கள் நாயன்மார்களையும் அவர்கள் பாடிய தேவார திருவாசகங்களைப் போல் பன்னிரு ஆழ்வார்கள் பாடியருளிய நாலாயிர திவ்ய பிரபந்தை அறிந்திலர்.

வரலாற்றில் சிவ வணக்கத்தை விட திருமால் வணக்கம் பண்டு தொட்டு இருந்து வருகிறது.
தொல்காப்பியம்/பொருளதிகாரம்/அகத்திணையியல் நானிலத் தெய்வங்கள் பற்றிப் பேசுகிறது. தொல்காப்பியம் என்ற இலக்கண நூலே தமிழில் உள்ள மிகப் பழைய நூல் என அடையாளம் காணப்பட்டுள்ளது. தொல்காப்பியம் இரண்டாவது தமிழ்ச் சங்க காலத்து நூல் எனத் துணியப்படுகிறது.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்,
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்.
(தொல்காப்பியம் அகத்திணையியல்)

இதன் பொருள் எல்லோருக்கும் தெரிந்ததே. மாயோன் மேய காடு உறை உலகமும் – மாயவன் விரும்பிய காடு பொருந்திய உலகமும் சேயோன் விரும்பிய மைவரை உலகமும் – முருகவேள் மேவிய மைவரை உலகமும், வேந்தன் விரும்பிய தீம்புனல் உலகமும் – இந்திரன் மேவிய தீம்புனல் உலகமும் வருணன் மேய பெருமணல் உலகமும் – வருணன் விரும்பிய பெருமணல் உலகமும் முறையே முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச் சொல்லிய முறையினானே சொல்லவும் படும்.

இந்த நிலத் தெய்வங்களின் வரிசையில் சிவன் விடுபட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் புறநானூறு போன்ற சங்க இலக்கியங்கள் சிவன் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

ஞாலம் காக்கும் நால்வர் பற்றியும், அவர்களது தோல்வி காணாத ஆற்றல் பற்றியும் புறநானூற்றுப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது.

ஏற்று வலன் உயரிய எரி மருள் அவிர் சடை,
மாற்று அருங் கணிச்சி, மணி மிடற்றோனும்
கடல் வளர் புரி வளை புரையும் மேனி,
அடல் வெந் நாஞ்சில், பனைக் கொடியோனும்
மண்ணுறு திரு மணி புரையும் மேனி,
விண் உயர் புள் கொடி, விறல் வெய்யோனும்,
மணி மயில் உயரிய மாறா வென்றி,
பிணிமுக ஊர்தி, ஒண் செய்யோனும் என
ஞாலம் காக்கும் கால முன்பின்,
தோலா நல் இசை, நால்வருள்ளும்
கூற்று ஒத்தீயே, மாற்று அருஞ் சீற்றம்
வலி ஒத்தீயே, வாலியோனை
புகழ் ஒத்தீயே, இகழுநர் அடுநனை
முருகு ஒத்தீயே, முன்னியது முடித்தலின் (புறநானூறு 56)

காளைமாட்டின்மேல், விரிந்த தீ நிறச் சடை, கையில் சூலம்,நஞ்சுண்ட நீலநிறத் தொண்டை ஆகியவற்றுடன் தோன்றும் சிவனாகிய கூற்றுவன் சீற்றம் கொள்வதில் ஈடு இணை அற்றவன்.

கடல் சங்கு போன்ற வெண்ணிறமு, யாஞ்சில் என்னும் உழுபடை, பணைமரச் சின்னம் பொறித்த கொடி ஆகியவற்றுடன் விளங்கும் பலராமன் வலிமையில் சிறந்து விளங்குபவன்.

கழுவிய நீலமணி போன்ற மேனிநிறமும், கருடப் பறவைச் சின்னம் பொறித்த கொடி, ஆகியவற்றைக் கொண்ட திருமால் ஆகியவற்றுடன் பகைவரை வெல்லும் புகழில் மேலோங்கி நிற்பவன்.

மயிலைக் கொடியாகவும், ஊர்தியாகவும் கொண்டு விளங்கும் முருகன் நினைத்ததைச் செய்து முடிக்கும் ஆற்றலில் சிறந்து விளங்குபவன்.

திருமுருகாற்றுப்படை முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான ஆவினன்குடி (பழனி, பொதினி) என்னும் ஊரினை புள்ளணி நீள்கொடிச் செல்வன் (திருமால்), மூவெயில் முருக்கிய செல்வன் (சிவன்), நான்கு கொம்பு யானை ஏறிய செல்வன் (இந்திரன்), தாகரை பயந்த நான்முக ஒருவன் (பிரமன்) என்னும் நாற்பெருந் தெய்வம் பேணிவந்ததாகக் குறிப்பிடுகிறது.

திருமுருகாற்றுப்படை முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான ஆவினன்குடி (பழனி, பொதினி) என்னும் ஊரினை புள்ளணி நீள்கொடிச் செல்வன் (திருமால்), மூவெயில் முருக்கிய செல்வன் (சிவன்), நான்கு கொம்பு யானை ஏறிய செல்வன் (இந்திரன்), தாகரை பயந்த நான்முக ஒருவன் (பிரமன்) என்னும் நாற்பெருந் தெய்வம் பேணிவந்ததாகக் குறிப்பிடுகிறது.

நாற்பெருந் தெய்வத்து நல்நகர் நிலைஇய
உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவனாக
ஏமுறு ஞாலம் தன்னில் தோன்றி
தாமரை பயந்த தா இல் ஊழி
நான்முக ஒருவன். (திருமுருகாற்றுப்படை 169–165)

உலகப் பொதுமறையாம் திருக்குறளில் 'தெய்வம்' என்ற சொல் மொத்தம் ஆறு குறட்பாக்களில் பயின்று வந்துள்ளது. இச் சொல்லுக்கு 'மனிதரிடத்தில் இல்லாத புதிய ஆற்றலைக் கொண்ட ஒரு கடவுள்' என்றும் 'விதி' என்றும் பொருள் கொண்டு விளக்கம் கொடுத்துள்ளனர் பல உரை ஆசிரியர்கள். ஆனால் இப் பொருட்கள் இக் குறள்களுக்குப் பொருந்தாது.

தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று ஆங்கு
ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை. (குறள் 43)
வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும். (குறள் 50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம் தொழாஅள் கொழுநற் தொழுது எழுவாள்
பெய் எனப் பெய்யும் மழை. (குறள் 55)
தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி தன்
மெய்வருத்தக் கூலி தரும். (குறள் – 619)
ஐயப்படாது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல். (குறள் 702)
குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடித்தற்றுத் தான் முந்துறும். (குறள் 1023)

கடவுள் என்ற சொல்லை அவர் திருக்குறளில் கையாளவே இல்லை. கட+உள் என்று இச்சொல்லைப் பிரித்து நமக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று நமக்கு உள்ளும் நம்மைக் கடந்தும் (அப்பாலும்) இருக்கிறது என்று இச்சொல்லுக்குப் பொருள் கூறுவர். அல்லது கடவுதல் (இயக்குதல், செலுத்துதல்) என்ற சொல் அடியாகப் பிறந்தது இச் சொல் என்ற கருத்தும் உண்டு. உயிர்களுக்கெல்லாம் அப்பால் நின்று ஒரு சக்தி அவற்றைக் கடவுகின்றது என்ற கருத்து இதில் இருக்கிறது.

இப்படிப்பட்ட, உயிர்களுக்கும் மனிதருக்கும் அப்பாற்பட்ட ஒரு சக்தியில் (transcendent force) திருவள்ளுவருக்கு நம்பிக்கை இல்லாததனால்தான் அவர் இச்சொல்லைத் தமது நூலில் எங்குமே பயன்படுத்தவில்லை என்று கருதமுடியும்.

இறைவன்–தெய்வம் என்ற சொற்கள் கடவுள் என்ற கருத்துக்கு மாறானவை. தேவன் அல்லது தேவ என்ற சொல்தான் தெய்வம் என்ற வடிவத்தில் தமிழில் வழங்குகிறது. இச்சொல்லுக்கு மனிதனைவிட உயர்உலகம் ஒன்றில் வாழும் (மனிதனைவிட அதிகமான, ஆனால் எல்லைக்குட்பட்ட சக்தியுடைய) உயர்பிறவிகள் என்பது பொருள். வள்ளுவரும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்று சொல்கிறார். மனிதர்கள் தங்கள் நிலையில் உயரும்போது தெய்வம் ஆகிறார்கள்.

நாயன்மார்கள், ஆழ்வார்களது பக்தி இயக்கத்துக்குப் பின்னரே முழுமுதற் கடவுள் என்ற கோட்பாடு பிறந்தது.● (வளரும்)


• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

JRB Universal Inc.
Almost All Services Available

647 289 6164





R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.

Scholarship Plan [RESP]

Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

தமிழர் தகவல் பிரதிகளை மாதாந்தம்
முத்திரைக் கட்டணம் செலுத்தி
தபாலிலும் பெறமுடியும். விபரங்களுக்கு
416 920 9250
e-mail: tamilsinfo@sympatico.ca

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank
You're richer than you think.

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

# உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்





- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்திலூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

Chapel Ridge

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng

Funeral Director

**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**

Funeral Counsellor

**416-431-3600** Ext:2





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..

On high with your thoughts

PROMAR Ltd.



- Corporate Awards
- Promotional Products
- Laser Engraving
- Pad Printing
- Silk Screening


*Vivek Subra*
Director
B:416- 291 2344
D:416- 898 4846
promarawards@gmail.com

www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5




வாங்குவதும் விற்பதும் சுலபமே ஆனால்..
தெளிவான தெரிவே உங்கள் வெற்றிப்படி.

***Why think so long...?***






- Free market evaluation
- Professional advice on selling your home for more
- State of the art marketing idea
- Flexible commission
- Friendly service producing excellent results
- List through me to have your property sold in a few days

Mortgages & loans arrangements


**Homelife/Future**
Realty inc. Brokerage
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated


416- 898 4846











# கோவில் மாலைகள் மற்றும் பூஜை பொருட்கள்

**5633 Finch Ave East, Unit # 6, Scarborough, ON M1B 5K9**
**(416) 288-1419**

சொர் பூக்கள், சரம் மற்றும் பூஜைக்கு தேவைப்படும் இலை வகைகள்

| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கார்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கார்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பாகினி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அரலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |

Fancy Florist




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன் 17

நாவலப்பிட்டியவில் அமைந்துள்ள பிரபல பாடசாலையொன்றின் அதிபரை இழிவுபடுத்தி, முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்த செய்தியைப் பார்த்த அவ்வதிபருக்கு உயர்குருதியமுக்க நோய் ஏற்பட்டு அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என்ற செய்தியை படித்ததும் சிரிப்பதா இல்லை அழுவதா என்று தெரியவில்லை. முகப்புத்தக்தில் பலர் இத்தகைய இழிவேலைகள் செய்து பலரை ஹை ப்ளட் பிரஸருக்குள் தள்ளிவிடுகிறார்கள். பிடிக்காதவரை அவதூறு செய்வதற்கும் முகப்புத்தகம் உபயோகமாகிவிடுகிறது என்பதுதான் சோகம்.

சென்ற மாதம் முகப்புத்தகத்தில் நான் கண்ட விவாதங்கள் சில அவதூறுகளாக மாறி அடித்துக் கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது. அவற்றை மீண்டும் திருப்பிப் படித்துப் பார்க்கும்போது இத்தகைய அவதூறுக்காரர்கள் பெரும்பாலும் வேறு வேலை இல்லாமல் முகப்புத்தகத்தில் தொங்குபவர்களாத்தான் இருக்கவேண்டும் என்றே தோன்றுகிறது. எதற்குமே எதிர்மறையான பேஸ்புக் கமென்ட் ஒன்றை இட்டுவிடுவது-தான் தன் சமூகக் கடமை என்று ஒரிருவர் நினைக்கிறார்களோ எனும் அளவிற்கு பேஸ்புக் சமூகக் காவலர்கள் நிறைந்துவிட்டார்கள். ஒரு பிரச்சனையை தாம் எங்கும் எதிர்த்துநின்று முகம் கொடுக்காமல் முகப்புத்தகத்திற்கு கொடுத்துவிட்டு திருப்தியாகி-விடுகிறார்கள். மற்றவர்களின் சுதந்திரத்தில் தலையிடுவது முற்போக்கு அல்ல.

தமிழகம் சென்றிருந்த முதலமைச்சர் விக்கினேஸ்வரனின் சென்னை ஆங்கிலத்திலும் தமிழிலுமான மேடைப்பேச்சு முகப்புத்தகத்தில் பகிரப்பட்டாலும் அதிகம்பேர் அதைக் குறித்து ஆதரவாய் எழுதவில்லை என்பதை கவனித்தேன். யாரும் அப்பேச்சினை எதிர்மறையாக விமர்சிக்கவுமில்லை. ஆனால் தமிழகத்தில் சீமான் விக்கினேஸ்வரனை விமர்சித்தார். சீமானின் விமர்சனத்திற்கு நம்மவர்கள் வரிந்து கட்டிக்கொண்டு முகப்புத்தகத்தில் எதிர் விமர்சனம் வைத்தார்கள்.

கடந்த மாதம் தமிழகத்தைச் சேர்ந்த 5 மீனவர்களுக்கு இலங்கை அரசு தூக்குத்தண்டனை விதித்துவிட்டு பிறகு மன்னிப்புக் கொடுத்து அனுப்பிவைத் - தல்லவா.. அந்த விவகாரம் குறித்தும் பலவிதப் பதிவுகள். போதை பொருட்கள் கடத்தியதாக ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க வேண்டும் என கை, கண்களை கட்டி அடித்து துன்புறுத்தினார்கள் என இலங்கை போலீசார் மீது தமிழக மீனவர்கள் குற்றச்சாட்டு வைத்தனர். "ராமேஸ்வரம் மீனவர்கள் மீன்பிடிக்க செல்வதென்றால், இந்தியாவின் கடலோரக் காவல்படையிடம் அனுமதியும், டோக்கனும் பெற்றுச் செல்லவேண்டும். இவர்கள் குற்றவாளியெனில், கடலோரக்காவல்படையும், பாதுகாப்புதுறையும் குற்றவாளிகள்தானே... ஆக ராஜபக்சேவின் இந்த மன்னிப்பு, இந்திய கடலோரக் காவல்படைக்கும், பாதுகாப்புத்துறைக்கும் சேர்த்தேதான் கொடுக்கப்பட்டுள்ளதா?" என்றார் ஒருவர். "நடைபெற்ற இந்த சம்பவம் எம்மவருக்கு இந்தியாவில் நடந்திருந்தால் பிரணாப் முகர்ஜி தண்டனையை இரத்து செய்திருப்பாரா.?" என்றார் வேறொருவர். "வடக்கு "கிழக்கில் உள்ள இளம் சமுதாயத்தினர் மீது அக்கறையுள்ள அனைவரும் போதைபொருள் கடத்தலில் ஈடுபட்டவர்களுக்கு மஹிந்தா மன்னிப்பு வழங்கியதை எதிர்த்திருக்க வேண்டும். "மன்னிப்பு வழங்க வேண்டாம் என முதல்வர் விக்னேஸ்வரனும், த.தே.கூவும் வலியுறுத்தியிருக்க வேண்டும்" என்றார் இன்னொருவர். "அவர்களுக்கு இந்தியாவிலும் தண்டனை இல்லை. குற்றவாளிகளை மோடியே நேரடியாக சந்திக்கின்றார். சககுற்றவாளிகளான இலங்கையர் மூவரினதும் நிலை என்ன? அதை பற்றி சிந்திப்பதற்கு யாரும் இல்லை." என்றது ஒரு பதிவு. "எமது இளம் சமுகத்தை போதைக்கு அடிமையாக முனையும் எந்த ஒரு தமிழகத்தவனையும் போட்டுதள்ளுவதை தவிர வேறு வழியில்லை. தொப்புள் கொடியை வெட்டி வீசிவிட வேண்டியதுதான். இதற்கு உடந்தையாகும் இலங்கையனுக்கும் விலக்கு அளிக்க முடியாது. தமிழகத்தவனை மன்னித்தாலும் இலங்கையனை மன்னிக்க கூடாது." என்றது மேலுமொரு பதிவு. இது எப்பிடி இருக்கு?

80-90களில் ரொறன்ரோவில் மேடை நாடக நிகழ்ச்சிகளுக்கு சென்று அந் நிகழ்ச்சி குறித்து ஏதோ ஒரு பத்திரிகையாவது காரசாரமாக எழுதுவது வழக்கம். பிறகு அந்த வழக்கம் அருகிப்போய்விட்டது. ஆனால் இன்று முகப்புத்தகத்தில் மீண்டும் அந்த விமர்சனக் கலாசாரம் உருவாகிவிட்டது. சமீபத்தில் ரொறன்ரோவில் நடந்த நாடகம் ஒன்றில் கனடா வந்த சராசரி யாழ்ப்பாணத்தான் ஒருவனை விமர்சிப்பதாய்க் கருதிப் போடப்பட்ட நாடகம் ஒன்று பலத்த முகப்புத்தக விவாதத்திற்கு உள்ளானது. இங்குள்ள மக்களைச் சீர்திருத்தும் நோக்கிலேயே கோவில் வைத்திருக்கும் ஐயர்மாரும், பஞ்சாங்கமும், சமயமும், சமய அனுட்டானங்களும், பொன்னாடைகளும், பரஸ்பர முதுகு சொறிதலும் விமர்சிக்கப்பட்டதாக அந்த நாடகத்தின் ஆதரவாளர்கள் முகப்புத்தக விமர்சன விவாதத்தில் பலமாக தெரிவித்தார்கள். 'நாத்திக வாதம் பேசுபவர்கள் இந்து சமயம் குறித்து கிண்டல் செய்வதும், அதை சீர்திருத்தம் என்பதும் போலித்தனமானது' என்று இன்னொரு தரப்பு வாதிட்டது. நான் இந்த இரண்டாம் தரப்பில் வருபவனாக கீழ்வரும் பதிவை இட்டேன்:

"நாடகத்தை பார்க்கும்போதே நான் கடுப்பாகிவிட்டேன்... இந்த நாட்டிற்கு வந்த எவனும் எதையும் கொண்டு வராமல் இல்லை. அப்படியிருக்க தன் பாரம்பரியத்தின் நம்பிக்கையாக தொன்று தொட்டு வரும் மத நம்பிக்கையையும், அதை அவனுக்கு புகுத்திய சின்னங்களையும் அவன் மறந்து விடப்போவதும் இல்லை. கலாச்சார நிலையங்களாக, பலரது வாழ்க்கையில் அமைதி தரும் புகலிடங்களாகத்தான் நான் இங்கு உருவாகியிருக்கும் ஆலயங்களை பார்க்கிறேன். (அதன் மூலம் யாராவது பணம் சம்பாதித்தால் எனக்கென்ன.. சம்பாதித்துவிட்டுப் போகட்டுமே. இற் இஸ் ஹிஸ் பிஸ்னல்.. நன்ஓஃப் யவர் பிஸ்னஸ்.. இங்கு உருவாகியிருக்கும் ஆலயங்கள் என் பண்பாட்டின் தொடர்ச்சி. என் மதநம்பிக்கைகளின் வெளிப்பாடு. அதில் தவறுகள் இருக்குமென்றால் கோயில் கொமிற்றிக்கு போங்கள்... மெம்பராகி சரியாக்குங்கள்... இல்லையென்றால் " திராணி இருந்தால் கோர்ட்டுக்குப் போங்கள்.. வழக்குப் போட்டுச் சரியாக்குங்கள்... கடவுளைக் காண சாமான்யன் நாடும் இடம்தான் கோயில்கள். அதை விமர்சனம் செய்வதற்கு ஒரு தராதரம் வேண்டும். அதற்கு குறைந்த பட்சம் ஆஸ்திகனாக இருக்க வேண்டும்." என்பதாக நான் பதிந்திருந்தேன்.

இப்போதெல்லாம் முகப்புத்தகத்தில் சிலரது பதிவுகளைப் பார்க்கும்போது எப்போதுமே ப்ரொப்ளத்தை பேஸ் பண்ணுங்கள்.. பேஸ்புக் பண்ணாதீர்கள் என்றுதான் சொல்லவேண்டும்போல இருக்கிறது.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு மறைவஞ்சலி

ஈழத்தின் தொல்புரத்தில் பிறந்தவரும், மூளாயைச் சேர்ந்தவரும், மொன்றியல் மற்றும் ரொறன்ரோவை வதிவிடமாகக் கொண்டிருந்தவருமான ஓய்வுபெற்ற அதிபர், சமூக சேவையாளர், தமிழாசிரியர், கலைஞர்



## நாராயணர் முருகையா

பிறப்பு: 17 மார்ச் 1932 மறைவு: 15 நவம்பர் 2013

**நீரில்லாமல் ஓராண்டு**
**நிறைந்த கண்ணீரொடு....**
**இருண்ட எம்மனதுள்**
**நீங்காத பேரொளியாய்.....**

**மனைவி:** ஆசிரியை விசாலபூஷணம் முருகையா (கனடா)
**பிள்ளைகள்:** நாராயண மூர்த்தி (கனடா), ஜெகதாம்பிகை (இலங்கை), லலிதாம்பிகை (கனடா), விசாகதாஸன் (கனடா), சாரதா (ஜேர்மனி).
**மருமக்கள்:** கிருபானந்தமூர்த்தி (இலங்கை), விஜயநாதன் (கனடா), மேதிரி ஜெனிட்டா (கனடா), ஓல்கா (கனடா)
**பேரப்பிள்ளைகள்:** பிரதீபன், வர்ணப்பிரியா, ரெமி, பவித்திரா, அரவிந்தன், லக்ஷ்மி, லக்ஷனா, கௌதம், லக்ஷியா, நிவேதன், தபோதன், பரீத்தா, சுதன், விஜிதா.
**பூட்டப்பிள்ளைகள்:** சஷ்மிதா, அதர்வா

HERITAGE
Education Funds
**RESP**
**SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan


**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

**416. 841. 1866**
**416. 955. 9303**
E.mail: ganthiy@rogers.com

Graphic Jana - 647. 219. 7576



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# R & S AUTO SALES

Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட

வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

**36 வருட அனுபவம்**



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற

Radha

**R & S Auto Sales Inc.**
**Radha Motor Inc.**

3030 Markham Road
Scarborough, ON

**416-412-3838**
**416-836-5825**




எஸ். காந்தி

# வெள்ளிப் பணம் 91

வெள்ளிப் பணத் தொடரில் இம்முறை கடன் அட்டைகளை எவ்வாறு சிறந்த முறையில் கையாள்வது பற்றிய தகவல்களாக அமைய இருக்கின்றது.

காரணம் இந்த மாதம் 2014ஆம் ஆண்டின் இறுதி மாதம். உலகின் எல்லா நாடுகளிலும் யேசுபிரான் பிறந்த நாளான மார்கழி 25ம் திகதியினை கிறிஸ்மஸ் எனக் கொண்டாடும் காலம். கனடாவில் இக்காலத்தில், எல்லா மதத்தவர்களும் இனத்தவர்களும் இதனை ஒரு சமய நிகழ்வு என்கின்ற சிந்தனையைக் கடந்து, எல்லோருக்கும் ஒரு விடுமுறைக் கொண்டாட்டமாகக் கொண்டாடும் வழமை இருக்கின்றது.

இக்காலகட்டத்தில் தான் நண்பர்கள் உறவினர்களுக்கு அன்பளிப்புப் பொருட்கள் வாங்குவது, உணவகங்களில் சாப்பிடுவது, விருந்துகள் நடப்பது, பிரயாணங்களை மேற்கொள்வது போன்ற பலவகையான செலவுகள் மேற்கொள்ளப்படும் காலமாக இருக்கின்றது. இவற்றை எல்லாம் சிந்திக்காமல், வரவுக்கு மீறிய செலவுகளைச் செய்வதற்கு மிகவும் உறுதுணையாக இருப்பது கடன் அட்டையாகும்.

எனவேதான் கடன் அட்டைகளைக் கையாளுதல்பற்றிய தகவல்கள் காலத்துக்கு ஏற்ப ஒரு தகவலாக அமைகின்றது.

முதலாவதாக நீங்கள் கடன் அட்டைகளுக்கு விண்ணப்பிக்கும்பொழுது அதன் மூலம் எவ்வளவு பணம் கடனாக செலவு செய்ய முடியும் (Credit limit) என்பதனை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். கடன் அட்டையின் இரகசிய இலக்கங்கள் (PIN) எப்பொழுதும் ஞாபகத்தில் இருத்தல் அவசியம். அதனை எல்லோருடனும் பகிர்ந்துகொள்ளக் கூடாது. இன்னும் ஒருபடி மேலாக காலத்துக்குக் காலம் மாற்றிக்கொள்வதும் புத்திசாலித்தனமாக அமையும்.

உங்கள் கடன் அட்டை தொலைந்தாலோ அல்லது களவாடப்பட்டாலோ அதற்குரிய நிதி நிறுவனத்துடன் உடனடியாகத் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் உங்கள் கைத்தொலைபேசியில் அல்லது வேறு இடத்தில் எழுதி வைத்திருத்தல் வேண்டும். ஆகக்கூடியது இரண்டு கடன் அட்டைகளுக்கு மேல் வைத்திருத்தல் உங்களுக்கு பல வகையில் வரவுக்கு மேல் செலவு செய்யத் தூண்டும் பழக்கத்தினைக் கொண்டு வரும் என நிதி வல்லுனர்கள் கூறுகின்றனர்.

கடன் அட்டைகளின் வட்டி வீதம் கூடுதலாக இருப்பதால், எப்பொழுதும் வட்டியில் இருந்து தப்ப வேண்டுமாயின், பொருட்களை வாங்கிய நாளிலிருந்து 21 நாட்களுக்குள் அதற்குரிய தொகையை செலுத்திவிடுங்கள். அப்படியான ஒரு சூழ்நிலை இல்லாத சந்தர்ப்பத்தில், ஆகக்குறைந்த தொகையையாவது நேரகாலத்துக்குச் செலுத்துவதன் மூலம் உங்கள் (Credit score) கடன் பெறும் தகுதியை வளர்த்துக்கொள்ள முடியும்.

கடன் அட்டை மூலம் பணத்தை முற்பணமாகப் பெறும் பழக்கத்தைக் கைவிடுங்கள். காரணம், இதற்கு உங்களுக்கு பணம் பெற்ற நாளிலிருந்து வட்டி கணக்கிடப்படும். அத்துடன் வட்டி விகிதம் கூடுதலாக இருக்கும். ஒவ்வொரு மாதமும் கடன் அட்டைக்கான statement இனை கவனமாகப் பார்த்து, அது சரியாக இருக்கின்றதா என்பதனை உறுதிசெய்துகொள்ளுங்கள்.

உங்கள் கடன் அட்டை மூலம் மாதாமாதம் அதிகரித்துச் செல்லுகின்ற நிலையில் அதாவது உங்களால் அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் போகின்ற வேளை உடனடியாக கடன் அட்டை மூலம் செலவு செய்யும் முறையை நிறுத்திவிட்டு, அதற்கான தொகையை முழுமையாகச் செலுத்திவிட்டு, திரும்ப இதனை உபயோகிப்பது புத்திசாலித்தனமாக அமையும்.

சுயகட்டுப்பாட்டுடன் செலவுசெய்யும் பழக்கத்தினை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். அத்துடன் உங்கள் நிதி சம்பந்தமான நடவடிக்கைகளை நீங்களாக அவதானித்துக்கொள்ளுங்கள். வரவுக்கு மேல் செலவுகள் செல்லாத வகையில் பார்த்துக்கொள்ளுங்கள்.


கடன் அட்டைகள் உங்கள் நண்பனா? அல்லது எதிரியா என்பது, நீங்கள் அதனை எப்படி பயன்படுத்துகின்றீர்கள் என்பதனைப் பொறுத்து அமைகின்றது. மேலே சொல்லப்பட்ட ஆலோசனைகள் இதனை ஒரு நண்பனாக வைத்துக்கொள்வதற்கான தகவல்கள் ஆகும்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
416 321 6420





• Vertical blinds
• Venetian blinds
• Draperies
• Curtains
• Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்


## சமையலறையில்...

பவுடரை தூவிய பின்னர் வினிகர் போட்டு 5 நிமிடங்களில் துடைத்து எடுக்கலாம். அதன் பின்னர் கழுவலாம்.

வினிகருக்குப் பதிலாக ஹைரஜன் பெரோஒட்சைடினாலும் (hydrogen peroxide) சுத்தம் செய்யலாம். வினிகரால் அல்லது ஹைரஜன் பெரோஒட்சைடினால் சுத்தம் செய்வதைவிட இரண்டையும் கொண்டு சுத்தம் செய்வது அதிக பயனுள்ளதாக இருக்கும் எனச் சில ஆய்வுகள் சொல்கின்றன. இரண்டில் ஒன்றை முதலில் ஸ்ப்ரே செய்து 10 நிமிடங்கள் கழிந்த பின்னர் சுத்தமாகத் துடைத்து எடுங்கள். பின்னர் மற்றதையும் அவ்வாறே ஸ்ப்ரே செய்து 10 நிமிடங்களில் சுத்தமாகத் துடைக்க வேண்டும்.

வினிகர் மற்றும் ஹைரஜன் பெரோஒட்சைடைப் பயன்படுத்துவது ஓரளவு இயற்கை முறையாகும். பெரும்பாலான கிருமி அகற்றிகளில் உள்ள பாதகமான இராசயனங்கள் இவற்றில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அன்று அவர்களது வீட்டில் மீன் கறி சமைத்திருந்தார்கள். உணவில் காய்கறிகளும் சேர வேண்டும் என்பதால் சலட் செய்தார்கள். மீன் வெட்டிய பலகையை சரியாகச் சுத்தம் செய்யவில்லை என நினைக்கிறேன். அதே வெட்டும் பலகையில் வைத்தே காய்கறிகளை வெட்டி சலட் தயாரித்ததால் வந்த வினை குடும்பமாகப் பாதித்திருந்தது. உணவு கிருமிகளால் மாசடைந்து நோயை ஏற்படுத்தியிருந்தது.

### உணவு மாசடைதல்

உணவு கிருமிகளால் மாசடைந்து நோயை ஏற்படுத்துவதை உணவு நஞ்சாதல் (Food poisoning) எனச் சொல்வார்கள். இதனால் உலகளாவிய ரீதியில் நாளாந்தம் பெருமளவு பாதிக்கப்படுகிறார்கள். சாதாரண வயிற்று வலி முதல் கடுமையான வயிற்றோட்டம் அல்லது மலத்துடன் இரத்தம் சீதம் கலந்து வெளியேறுவது போன்ற அறிகுறிகள் ஏற்படலாம். வாந்தி, வயிற்றுப் பிரட்டு, வயிற்று வலி, வயிற்று முறுக்கு, காய்ச்சல், உடல் உளைவு போன்ற பல்வேறு அறிகுறிகள் தோன்றலாம்.

வாந்தி வயிற்றோட்டத்தால் கடுமையான நீரிழப்பு நிலை ஏற்பட்டு நோயாளியை மருத்துமனையில் அனுமதித்து நாளம் ஊடாக நீர் ஏற்றவும் நேரலாம்.

சுமார் 250 வகையான கிருமிகள் இவ்வாறு மாசடைந்த உணவுகள் மூலம் பரவுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.●


ALL COUNTRIES - WWW.TAMILSYELLOWPAGE.COM
WWW.ENGLSIHYELLOPAGE.COM WWW.ASIANYELLOPAGE.COM
CANADA & INTERNATIONAL BUSINESS WEBSITE DIRECTORY
A1 CANADA → JOB AGENCY & COURIER SERVICE • A1 COLOMBO → DIGITAL PHOTO STUDIO
A1 CEYLON → FINANCIAL SERVICE & MORTGAGE • ALL COUNTRIES → TOUR SERVICE
ST-FRANCIS → PHOTOGRAPHY & VIDEOGRAPHY • MORE & MORE & Etc
TAMILYP@gmail.com - ENGLISHYP@gmail.com - ASIANYP@gmail.com
416 644 7273 416 752 4444 416 613 2919
2296 EGLINTON AVE, EAST @ BIRCHMOUNT RD - UNIT 3 LOWER LEVEL - SCARBOROUGH - TOR - ONT - M1K 2M2 - CANADA




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# ஒழுக்கம் உடைமை

உடைமை என்றால், செல்வம், கல்வி, பொருள், சொத்து என்றெல்லாம் பொருள்படும். இங்கே மனிதாய நலத்தோடு கூடியதாய்ப் பேசப்படுகிறது, போற்றப்படுகிறது. மனித விழுமியங்களிற் தலையாயது ஒழுக்கம், விழுப்பம் நன்மை. இங்கே வள்ளுவனார் ஒழுக்கம் பற்றிப் பாடி, எங்கெங்கு எல்லாம் பேச முடியுமோ அங்கெல்லாம் எடுத்தாண்டுள்ளார். எனவே, அதன் பெருமை சொல்லுந்தரமன்று. மனித்தப் பிறவி மேலானது, தனிச்சிறப்புடையதும் கூட... மனித விழுமியம் ஒழுக்கத்தால் உயர்ந்தது, எனவே உலகெங்கனும் உள்ள மக்கள் மானுடர். எனவே மானுடம் வென்றதே அஃதனாற்றான். மானிடம் வென்றது எனப் பாடிய பெருங்கவி கம்பன். அதைக் கண்டு மகா கவி பாரதியே, கம்பனென்ற மானுடன் வாழ்ந்ததும் எனக் கவி செய்துள்ளார்.

ஆக மானுடம் உயர்ந்தது என்றால் மானிடம் தான் காரணம். மானுடத்துக்கான, பரம்பரை பேணப்பட நாம் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்றல் இன்றியமையாதது. வள்ளுவன் வரைந்து காட்டிய இக்குறட்பா, ஒழுக்கத்துக்கும் நற்பழக்கவழக்கங்கட்கும் முன்னுரிமை வழங்கி வந்துள்ளது அன்றோ? எனவே உடைமை யென்று வியந்துரைத்தவர். மனிதத்தைப் போற்றியவர் பெரும்புலவர் வள்ளுவனார். வாழு. வாழ விடு என்ற மனோதர்மம் நீதியானது. நிதி நீள வேண்டும். சீவன் சிவனாக வேண்டும். ஆக ஒழுக்கம் மேம்பட உயிர் வேண்டும். எனவே ஒழுக்கத்தை உயிரினும் மேலானது என்றவர் செந்நாப்போதார். ஏலவே சொன்னேனே. ஒழுக்கம் பெறுமானத்தால் உயர்ந்தது மனிதம்.

செவ்வாய் செல்வங்களின் மேலாய் ஒழுகலாறு தமிழ் செய்யப்பட்டிருப்பதை அவதானிப்பாம்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்
ஓம்புதல் - விரும்புதல் எனவும் அர்த்தப்படும்
131

பொருள்: ஒழுக்கம் எப்பொழுதும் மேன்மையைத் தருவதால். அந்த ஒழுக்கமே, உயிரினும் மேலானதாகப் போற்றப்படும்.

எனவே வருந்தியேனும், ஒழுக்கத்தைக் கட்டிப் பாதுகாப்பது நம் கடமையும், உருமையுமாம் எம்மை வளர்த்தது அதுவே.

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதேதுணை 132

வருந்தியேனும் ஒழுக்கத்தை போற்றிப் பாதுகாக்க வேண்டும். காரணம் எல்லாவற்றையும் துருவி ஆராய்ந்தபோது ஒழுக்கமே மனித உயிருக்குத் துணையாகும். வள்ளுவப் பெருந்தகை அதற்கே முன்னுரிமை வழங்கியுள்ளார்.

ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய்விடும் 133

பொருள்: ஒழுக்கம் உடைமை குடிமை - ஒழுக்கம் உடையவராய் வாழ்வதே உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மை, ஒழுக்கம் தவறுதல் - இழிந்த பிறப்பின் தன்மையாம். எனவே இமையம் போன்ற உயரிய தன்மைகளை மனிதம் ஏற்றும் பரப்பவும் வேண்டும். ஒழுக்கம் தவறின் அப்பிறவி இழிந்ததாய் விடும். ஒவ்வொரு குடும்பத்தினரும் உயரிய பணிவுகளை விதைத்துப் பயிராக்கினால் நிறையருவகை பெறலாமன்றோ.

இவ்வண்ணம், உயரிய ஒழுக்காறுகளை நிரைபோட்டு நிகர லாபமான அறுவடையாகும்.

இந்த ஒழுக்கம் இரண்டாகப் பேசப்படுகிறது. இஃது உலக இயல்புதான். குறளாசான் ஒழுக்கத்தை நல்லொழுக்கம் தீயொழுக்கமென இருவகைப்படும்.

இந்த உலகத்தை ஓர்ந்து பார்த்தால் நல்லதும் கெட்டதும் கலந்து இருக்கும். எனவே நல்லொழுக்கத்தைக் குறள் விதைத்து உயரிய நெல்லை விதைத்து வளர்க்க வேணும். இது பற்றி வள்ளுவனார் என்ன சொல்கிறார் எனப் பார்ப்போம்.
இழுக்கத்தின் ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை
எய்துவர் எய்தாப் பழி 137

பொருள்: ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை - நல்லொழுக்கத்தால் யாவரும் நன்மையடைவர் ஒழுக்கம் தவறுவதால், தாம் அடையக்கூடாத பெரும்பழியை அடைவோம். எனவே நீவிர் விரும்புவது எதை. நன்மையையே ஆம். நேயர்களே! நீங்கள் விழைவது எதனை? பார்ப்போம்.

நன்றிக்கு வித்தாகும் நல் லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும் 138

பொருள்: நல்லொழுக்கம் ஒருவனுக்கு அறத்தைத் தரும். மேன்மை தரும். உயர்வு, செல்வம், மகிழ்ச்சியளிக்கும். இம்மை மறுமை இரண்டிற்கும் பயன் தரும். பெண்களும் மேன்மை எய்துவர். எனவே வள்ளுவர் பார்வையிற் சொன்னால் இம்மை மறுமை இரண்டினிற்கும் நன்மையளிக்கும். எனவே நாம் என்ன செய்ய வேண்டும்? மனிதம் உயர்ந்தது. மறந்தும் தீமையான சொற்களை நாம் நம் வாயினாற் கூறினால் துன்பம் எய்துவோம் என்பதை உணர்வீராக.

ஒழுக்கம் உடையவர்க்கு ஒவ்வாவேதீய
வழுக்கியும் வாயாற் சொலல் 139

மறத்துக்குத் தீமையான சொற்களைக் கூறாதீர்கள். நன்மையே செய்வீர். நன்மையே அடைவீர்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலாதார் 140

உலகிலுள்ள உயர்ந்தவர்களோடு ஒத்து ஒழுகுதலை அறியாதவர்கள் பல நூல்களைக் கற்றாலும் அறிவில்லாதவர்களேயாம்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத குடியேற்றக்காரர்களுக்கு வதிவிட உரிமம்: ஒபாமா நடவடிக்கை



அமெரிக்க அதிபர் ஒபாமா தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறாமலேயே அமெரிக்காவின் குடிவரவுக் கொள்கையிலும் கட்டமைப்பிலும் மாற்றங்களைச் செய்துள்ளார்.

தனது இந்த நடவடிக்கையின் மூலம் எதிரணியிலுள்ள குடியரசுக் கட்சிக்கு அதிபர் ஒபாமா சவால் விடுத்துள்ளார். அமெரிக்க அதிபர் ஒபாமா அறிவித்துள்ள இந்த மாற்றங்களினால் அமெரிக்காவில் உரிய வதிவிட ஆவணங்கள் இன்றி வாழ்ந்துவருபவர்களில் சுமார் ஐம்பது லட்சம் சட்டவிரோதக் குடியேறிகள் பயன்பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவில் ஒரு கோடியே பத்து லட்சம் பேர் உரிய வதிவிட ஆவணங்கள் இல்லாமல் வாழ்ந்துவருவதாக மதிப்பிடப்படுகிறது. அவர்களில் ஐந்து ஆண்டுகாலத்துக்கும் அதிகமான காலம் அமெரிக்காவில் வாழ்ந்தவர்கள் மட்டுமே ஒபாமா அறிவித்துள்ள இந்த புதிய மாற்றத்தால் பலனடைய முடியும். இந்த திட்டத்தின்படி, உரிய வதிவிட ஆவணங்கள் இல்லாமலேயே அமெரிக்காவில் வாழ்ந்து, அமெரிக்காவில் பிள்ளை பெற்றதன் காரணமாக, சட்டபூர்வமான அமெரிக்கப் பிரஜையாக இருக்கும் ஒரு பிள்ளைக்கு பெற்றோராக இருப்பவர்கள் மட்டும், அரசாங்கத்திடம் விண்ணப்பித்து மூன்று ஆண்டு காலத்துக்கான வேலைக்கான வதிவிட உரிமம் பெற முடியும்.

அமெரிக்காவுக்கு சிறுபிள்ளையாக வந்தவர்களுக்கு தற்காலிக சட்ட அந்தஸ்து வழங்கும் இன்னொரு மாற்றத்தின் மூலமாக வேறு லட்சக்கணக்கானோரும் பலனடைவார்கள் எனத் தெரிகிறது. சட்டவிரோதக் குடியேறிகளுக்கு குடியுரிமை வழங்கும் நடவடிக்கையல்ல தனது திட்டம் என ஒபாமா தெளிவுபடுத்தினார். “அமெரிக்காவுக்குள் அண்மையிலே சட்டவிரோதமாக நுழைந்தவர்களுக்கு இந்த திட்டம் பொருந்தாது. எதிர்காலத்தில் சட்டவிரோத வரக்கூடியவர்களுக்கும் இது பொருந்தாது. சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களாக இருப்பவர்கள் சட்ட அந்தஸ்துடன் வேலை பார்க்க முடியுமே ஒழிய அவர்களுக்கு குடியுரிமை வழங்குவதாகவோ, மற்ற அமெரிக்கர்களுக்கு கிடைக்கக்கூடிய சலுகைகளை வழங்குவதாகவோ எனது திட்டம் அமைந்திருக்கவில்லை.” என்றார் அதிபர் ஒபாமா.

சட்டவிரோதக் குடியேறிகள் குற்றச்செயல்களில் ஈடுபட்டால் அவர்களை நாடு கடத்தவும், எல்லைகளை இறுக்கி எதிர்காலத்தில் எவரும் அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக நுழைய வழியில்லாமல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஒபாமா குறிப்பிட்டார்.

காங்கிரஸ், செனேட் போன்ற சட்டம் இயற்றும் மன்றங்களின் ஒப்புதல் பெறாமல் தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி நிறைவேற்று அதிகார உத்தரவாக ஒபாமா இந்த மாற்றங்களை கொண்டுவந்திருப்பது சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலுமே ஜனநாயகக் கட்சி பெரும்பான்மையை இழந்துவிட்டுள்ள நிலையில், ஒபாமாவின் இந்த சர்ச்சைக்குரிய நடவடிக்கை, குடிவரவு விவகாரத்தை அடுத்த அதிபர் தேர்தலில் முக்கிய விவகாரமாக மாற்றிவிடும் என்றே தெரிகிறது.●


**The Children's Education Trust of Canada**
offered to the public by

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற**

சிவா
கணபதிப்பிள்ளை

**அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!**


Siva Kanapathypillai
Dealing Representative

**418 899 6044**

email
s.kanapathypillai@cefi.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


# FREE ! Real Estate Classes




## Successful Real Estate Office With Over 300 Salespeople

TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2012

TOP 6 HOMELIFE OFFICE IN CANADA 2011

TOP 7 HOMELIFE OFFICE IN CANADA 2010

★No Franchise Fees ★No Monthly Fees ★No Desk Fees

## International Award Winning Office

## Top 5th HomeLife Office In Canada-2012

- Atractive Commission Split.
- Over 300 Salespersons.
- Daily Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week

HOMELIFE HIGHER STANDARDS



**HOMELIFE /FUTURE REALTY INC.**, Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
**Bus: 905.201.9977 | 416.264.0101**

*Based on TREB data: 2012. (does not include independent or other franchisors). ©2012 HomeLife Realty Services Inc. All Rights Reserved.Each Office is Independently Owned and Operated. Not intended to solicit Agents or Brokers currently under contract.

*INDEPENDENTLY OWNED AND OPERATED*

**Selva Vettyvel**
*Broker of Record*
**Tel:416-568-4301**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org